Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk
விலை 30 ரூபா • தீபம் 37 • 03.04.2016




## 'காணாமல் போனவர்களை மனைவிமாரே கைவிட்டு விட்டனர்'

அனந்தி ஆவேசம்




# வெய்யிலோ வெய்யில்

# சக்தி கொடு!

இலங்கையர்களிற்கு முன்னர் சிங்கப்பூரில் ஒரு கண் இருந்தது. எதற்கெடுத்தாலும் சிங்கப்பூர் மாதிரி மாறுவதே இலக்கென்பார்கள். உள்ளூரில் சில பகுதிகளை 'குட்டி சிங்கப்பூர்' என வர்ணித்து சுயதிருப்தியடைந்தனர். இப்பொழுது அதில் சிறிய மாற்றமேற்பட்டு, சீனா பற்றியும் பேச ஆரம்பித்துள்ளனர். சீனாவின் பிரமாண்ட பொருளாதார பலம், தொழில்நுட்ப வளர்ச்சி, இலத்திரனியல் சாதன உற்பத்தி வீடுகள் வரை பரந்தது என நாம் பார்த்து வியக்க நிறைய விடயங்கள் உள்ளன.

அப்படியான பெரிய கனவுகள் கூடாதென்பதல்ல. நிச்சயம் அவசியமானது. ஆனால் இதில் கவனம் கொள்ள சில விடயங்கள் உள்ளன. சீனாவிற்கு, சிங்கப்பூரிற்கு முன்னுதாரங்கள் இல்லை. அதனால் அவர்கள் சிலவற்றை இழந்துதான் சிலவற்றை பெற்றனர். குறிப்பாக சீனா அடைந்த இன்றைய பிரமாண்ட பிம்பத்திற்காக கொடுத்த முக்கிய விலை சுத்தமான சுற்றுச்சூழல். சீனாவின் தொழில்துறை வளர்ச்சியின் முதல் பலிக்கடா சூழல். இன்றைய சீனா எதிர்கொள்ளும் பிரதான சவால் சுற்றுச்சூழல் மாசு.

மிகத்தெளிவான வார்த்தைகளில் சொல்வதானால், சீனாவில் சுத்தமான காற்று பைகளில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு வந்துவிட்டது.

சீனாவின் பல்வேறு பகுதிகள் அண்மையில் எதிர்கொண்ட இன்னொரு சவால் பிரமாண்ட தூசுப்படையால் ஏற்பட்ட இருள். சீனாவின் பல பகுதிகளில் இந்த இருள் தொல்லை ஏற்பட்டது.

உலகளவில் அதிக வெப்பத்தை வெளியிடும் முக்கிய நாடுகளில் சீனாவுமொன்று. சீனாவின் பிரமாண்ட தொழில்துறை, பொருளாதார வளர்ச்சி சுற்றுச்சூழல் பாதுகாப்பை பொருட்டாக கொள்ளவில்லை. அதன் விலைகளை சீனர்கள் கொடுக்க ஆரம்பித்துள்ளனர்.

சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் இப்பொழுதுதான் சீனா அதிக ஆர்வம் காட்ட ஆரம்பித்துள்ளது. இதன் ஒரு கட்டமாக தன்னிடமுள்ள எல்லா அனல்மின் நிலையங்களையும் மூடிவிட சீனா தீர்மானித்துள்ளது. இந்த முடிவால் சுமார் 20 இலட்சம் பேர் வேலையிழக்க உள்ளனர். அவர்களிற்கான மாற்று தொழில் வாய்ப்புக்கள் குறித்து சீனா சிந்தித்து வருகிறது.

யுத்தத்தின் பின் விரைவாக தொழில் வளர்ச்சி, புனரமைப்பு பணிகள் இலங்கையில் நடந்து வரும்போது எல்லா விடயத்திலும் சீனாவை நாம் முன்னுதாரணமாக கொள்ளலாம். எப்படி விரைவான அபிவிருத்தி செய்வதென்பதை மட்டுமல்ல, சுற்றுச்சூழலை எப்படி சீரழிக்க கூடாதென்பதையும் கற்றுக் கொள்ள வேண்டும்.

தன்னிடமுள்ள எல்லா அனல்மின் நிலையங்களையும் சீனா மூடிக் கொண்டிருக்க, சம்பூரில் நிறுவப்படவுள்ள அனல்மின் நிலையம் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

உலகளாவிய ரீதியில் அனல்மின் நிலையம் பற்றிய இரண்டு விதமான அபிப்பிராயங்கள் நீடிக்கின்றன. அனல்மின் நிலையம் ஆபத்தில்லாததென எல்லா அரசுகளும் சொல்கின்றன. அனல்மின் நிலையம் ஆபத்தானதென தன்னார்வ அமைப்புக்களும், மக்களும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். உலகளாவிய இந்த நியதிதான் சம்பூரிலும் நடக்கிறது.

ஏற்கனவே நுரைச்சோலை அனல்மின் நிலையத்திற்கு எதிராகவும் இதேவிதமான போராட்டங்கள் நடந்தன. எனினும், ஜனநாயகரீதியான போராட்டங்களிற்கு போதிய வாய்ப்பற்ற மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலமென்பதால் அந்த போராட்டம் நீடிக்கவில்லை.

நுரைச்சோலையில் பயன்படுத்தப்படுவது மிகப்பாதுகாப்பான அவுஸ்திரேலிய, இந்தோனேசிய நிலக்கரிகள். ஆனால் சம்பூரில் பயன்படுத்தப்படவுள்ளது ஆபத்து அதிகமான இந்திய நிலக்கரி.

அனல்மின் நிலையத்தால் ஆபத்து உள்ளதா இல்லையா என்ற விவாதங்களில் நாம் இறங்கவில்லை. அனல்மின் நிலையத்தால் பாதிக்கப்படுகிறோம் என்ற சம்பூர் மக்களின் குரல் கேட்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. ஒருவேளை அனல்மின் நிலையங்களால் பாதிப்புக்கள் இல்லையென வைத்தாலும், அது அந்த மக்களிற்கு புரிய வைக்கப்பட்டு திட்டத்தை முன்னெடுப்பதே சிறந்தது.


அரசுகளின் வர்த்தக நலன்கள் தொடர்புபட்ட இப்படியான பெரும் திட்டங்களிற்கு மக்களின் குரல்களை கேட்கும் பொறுமையில்லை என்ற குரூர வரலாறுதான் அச்சமூட்டுவதாக உள்ளது. இதிலுள்ள ஒரே நம்பிக்கையும், ஆறுதலும் எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தனின் உறுதிமொழி. சூழல் பற்றிய அரசுகளின் கரிசனையை வலியுறுத்தியதுடன், மக்களிற்கு கேடு விளைவிக்கும் திட்டத்தை ஏற்கப் போவதில்லையென்றும் கூறியுள்ளார். இந்த வாக்குறுதி ஒன்றுதான் சம்பூர் மக்களின் ஒரே நம்பிக்கை.

இந்த விடயத்தில் தொடர்ந்தும் மக்கள் நலன்சார்ந்து கூட்டமைப்பினர் செயற்பட வேண்டுமென்பதே எல்லோரதும் எதிர்பார்ப்பு.

**தீபம்**
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633

சந்தா : subs@deepam.lk
ஆசிரியர் பீடம் : editor@deepam.lk
விளம்பரம் : sales@deepam.lk
வேலைவாய்ப்பு : hr@deepam.lk
செய்திகளுக்கு : news@deepamnews.com

# சொன்னார்கள்



**கலாநிதி தயான் ஜயதிலக**

மைத்திரிபாலவிற்கு பிரதமர் பதவி வழங்கும்படி 2014 இலேயே நான் மகிந்தவிற்கு ஆலோசனை சொன்னேன். ஆனால் அது நடக்கவில்லை. மைத்திரிக்கு பிரதமர் பதவி கொடுத்தால் நிமால் சிறிபால டிசில்வா கோபிப்பார் என மகிந்த சொன்னார்.



**ஜீ.எல்.பீரிஸ் – ஒன்றிணைந்த எதிர்க்கட்சி**

எமக்கு கிடைத்த தகவலின்படி சாவகச்சேரியில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கி கொழும்பிற்கு கொண்டு வருவதற்காக தயார்நிலையில் இருந்துள்ளது. இப்படியான நிலையில் சம்பூர் போன்ற இடங்களிலுள்ள முகாம்களை அரசு அகற்றி வருகிறது. இது நாட்டின் பாதுகாப்பை கேள்விக்குட்படுத்தியுள்ளது.




**ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய – மின்வலு, புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்**

மின்சாரத் தேவை அதிகரித்துவிட்டது. அதனால் சம்பூர் அனல்மின் நிலைய திட்டத்தை கைவிட முடியாது. சூழல் பற்றிய சர்ச்சையொன்றுதான் உள்ளது. அதுபற்றிய நிபுணர்குழுவின் அறிக்கை கிடைத்ததும் நிர்மாணப்பணிகள் ஆரம்பமாகும். எந்த தடைகள் வந்தாலும் வெற்றிகொண்டு அதனை நிர்மாணிப்போம்.



**கருணாசேன ஹெட்டியாராய்ச்சி பாதுகாப்பு – அமைச்சின் செயலாளர்**

தேசிய பாதுகாப்பில் அவதானம் செலுத்தும் எனக்கு ஆலோசனை வழங்க துறைசார்ந்த பலர் உள்ளனர். இதில் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆலோசனை சொல்வதற்கு என்ன தேவை அல்லது தகுதி உள்ளதென்பது தெரியவில்லை. வடக்கு பாதுகாப்பிற்கு ஐயாயிரம் படையினர் போதுமென அவர் நினைத்தால், அதுபற்றி முறைப்படி எனக்கு கடிதம் மூலம் அறிக்கட்டும். அது பற்றி ஆராய தயாராக உள்ளோம்.



**விக்கிரமபாகு கருணாரட்ன – நவ சமசமாஜகட்சி தலைவர்**

சாவகச்சேரியில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கிக்கும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக்கும் தொடர்பிருக்கலாம். அவர்களுக்கு இராணுவத்திற்குள்ளும், யாழிலும் தொடர்புகள் இருக்கிறது. நாட்டில் பீதியை உண்டாக்கி, நல்லிணக்க நடவடிக்கைகளை சீரழிக்க இதனை செய்திருக்கலாம்.



**வாசுதேவ நாணயக்கார – ஒன்றிணைந்த எதிர்க்கட்சி**

ஜனாதிபதி பதவிக்கு மகிந்த ராஜபக்சவை விட வேறு ஒரு தகுதியானவரையும் தற்காலத்தில் நான் காணவில்லை. ஜனாதிபதியாவதற்கு எனக்கும் தகுதியுள்ளதுதான். ஆனால் மக்கள் விருப்பம் என்ற ஒரு தகுதியை எட்டும்வரை ஜனாதிபதியாக முடியாது.

# க்ளிக் பக்கம்

இரண்டு காகங்களின் அன்யோன்யம். ஒன்றுக்கொன்று துணையாகவும், ஆறுதலாகவும் வாழும் வாழ்வின் அழகிய தருணம் ஒன்று.

**என்னைப்பற்றி:** நான் இராசரட்னம் வித்திஆனந்தன். ஆசிரியராக பணிபுரிகிறேன். புகைப்படங்களில் ஆர்வமுள்ளது.



படப்பிடிப்பாளர்:
**இ.வித்திஆனந்தன்**

இடம்:
திருகோணமலை



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் editor@deepam.lk




கடந்த வாரம் தீபத்தின் சமூகஊடகங்களில் அதிகம் பார்க்கப்பட்ட, பகிரப்பட்ட படம் இது. நாமல் ராஜபக்ச யோகாசனம் செய்யும் படம். நாமல் சமூகஊடகங்களில் வெளியிட்டது. இணையவாசிகளால் அதிகம் கலாய்க்கவும்பட்டது.

## எண்ணிக்கை

**1** தென்னாசியாவில் அதிவேக இணையவசதியில் இலங்கையின் இடம்

**2** விசா முடிந்த பின்னும் இந்தியாவில் தங்கியிருக்கும் வெளிநாடுகளில் இலங்கையின் இடம்

**12** மதுபானசாலை அனுமதி வைத்துள்ள அமைச்சர்கள்

**6,491** க.பொ.த சாஃத பரீட்சையில் பிரதான பாடங்கள் ஆறிலும் சித்தியடையாதவர்கள்








இலங்கையின் இலவச சுகாதார சேவையை பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நடத்திய ஆர்ப்பாட்டம் கடந்த வாரம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் முன்பாக நடந்தது.



**www.facebook.com/fayas.ahmed**

வீட்டுக்கு பின்னால் உள்ள சிங்கள பகுதிகளில் எல்லாம் இந்தியாவின் தோல்வி இலங்கையின் தேசிய வெற்றியாக பட்டாசு வெடித்து கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த மகிழ்ச்சியான தருணத்திலே,
ஙிசிசிமி இன் கட்டுப்பாட்டில் உள்ள மிசிசி ஆல் நடத்தப்படும் இந்த உலகக் கிண்ண போட்டியிலே, அம்பயார்மார்களின் அற்புத விளையாட்டையும் தாண்டி வென்ற வெஸ்ட் இன்டீசுக்கு வாழ்த்துகள் .



**www.facebook.com/mynthan**

கெயில் அவுட்டானோட ஆளுக்காள் விட்டீங்களேடா ஒவ்வொரு அறிக்கை...ப்ப்பா...அதாச்சும் பரவாயில்ல.. இடுப்புக்கு மேல போட்ட பந்துக்கெல்லாம் நோ போல் இல்லைன்னும்,வெள்ளை கோட்டுக்கு மேலால போனா வைட் இல்லைனும் கைய விரிச்சீங்க பாருங்க..அப்பவே நீங்க தோத்துப்போட்டீங்கடா



**www.facebook.com/rimazahamed**

BCCI: சிமண்ட்ஸ் விளையாடறப்போ கை கொஞ்சம் கூடவா வளஞ்சிருக்கிற மாதிரி இல்ல?
மிசிசி: யோவ் யோவ்.. அது அவன் batting பண்றப்போயா.. இதல்லாம் வச்சி banலாம் பண்ண முடியாது...




**www.facebook.com/kavitha.muralidharan**

ஒரு முறை ஒரேயொரு முறை இயக்குனர் மகேந்திரனை பேட்டியெடுத்திருக்கிறேன். இந்து ஆங்கிலத்தில் வந்தது அது.
பேட்டி எடுக்கும் போது ஒரு கட்டத்தில் மகேந்திரன் தயக்கங்களை எல்லாம் உதிர்த்து சகஜமாக பேசத் தொடங்கினார். அப்போது திரையில் அவரது நாயகிகள் குறித்து பேச்சு வந்தது . தமிழ் திரையில் நாயகிகளுக்கான இடம் என்னவென்று நமக்கு நன்றாகவே தெரியும். ஆனால் மகேந்திரனின் நாயகிகள் தனித்துவமானவர்கள். அதனாலேயே என்னை மிகவும் கவர்ந்தவர்கள்.
ஜானியில் ஸ்ரீதேவியின் நடிப்புப் பற்றி பேசும் போது ஒரு முக்கியமான காட்சியில் ஸ்ரீதேவியின் உடல் பாவனை எப்படி இருக்க வேண்டும் என்று தான் எதிர்பார்த்ததை விளக்கினார். இப்படி உட்கார்ந்து இப்படி பார்க்கச் சொன்னேன் என்று சட்டென்று தனது கால்களை எடுத்து சோபாவில் மடித்து வைத்துக்கொண்டு முகத்தில் ஒரு பாவத்தை கொண்டு வந்தார். நான் வீடு திரும்பிய பிறகு யூடியூபில் அந்த காட்சியை தேடிப்பிடித்து பார்த்து அசந்துவிட்டேன். ஸ்ரீதேவி அப்படியே நடித்திருந்தார். இப்படியொரு அசாத்தியமான ஆற்றல் கொண்டுள்ள மகேந்திரன் ஒரு நடிகராகவும் மிளிர்வார் என்பதில் எனக்கு சந்தேகமில்லை..
ஆனால் மென்னுணர்வு ததும்ப வலம் வரும் நாயகிகளை தமிழ் திரைக்க தந்த இயக்குனரை மீண்டும் பார்க்க வேண்டும் என்றுதான் நான் மிகவும் விரும்புகிறேன்.










**சுபாஸ் மஞ்சுல ஹகந்தவெல**
கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி

கோப்பாய் நீர்வேலிப் பகுதியில் திருடர்களின் நடமாட்டத்தை இல்லாமல் செய்து இரண்டு மாதங்களாகிவிட்டன. திருடர்களை கட்டுப்படுத்த நிறைய நடவடிக்கைகள் எடுத்தோம். இரவுவேளைகளில் சந்தேகத்திற்கிடமாக நடமாடும் இளைஞர்களின் ஆளடையாளங்களை உறுதி செய்கிறோம். இரவுநேர ரோந்துகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. சிவில் உடையிலும் பொலிசார் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். கொள்ளையர்களை கைது செய்ய மோப்பநாயும் பயன்படுத்தப்படுகிறது.

இந்தப் பகுதி திருட்டு சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேக நபரொருவரை தெல்லிப்பளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்த சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்று சந்தேகிக்கப்படும் 3 பேர் கிளிநொச்சியில் மறைந்திருக்கின்றனர். அவர்களையும் விரைவில் கைது செய்வோம்.

# வாசலை தட்டும் 'குற்றப்பரம்பரை'



செல்வம்
selvam@deepam.lk

'இரவானாலே உயிரைக் கையில் பிடிக்கும் வாழ்க்கை. என்ன நடக்குமென்றதற்கு உத்தரவாதமில்லை. கத்தி, வாளுடன் யாராவது வீடு புகுவார்கள் என்ற பயத்துடன் உயிரைப்பிடித்துக் கொண்டுதான் வாழ்கிறோம். விடிந்ததும், சுகம் விசாரிப்பதைப் போல வீடு உடைக்கப்படவில்லையா என்றுதான் அயலவர்களிடம் விசாரிக்கிறோம்'

இது சினிமாவில் அல்லது கதைகளில் வரும் வசனமல்ல. யாழ்ப்பாணத்தின் ஒருபகுதி மக்களின் ஒட்டுமொத்த வாக்குமூலம். திருடர்களின் கோட்டையாக மாறிவிட்ட வலிகாமம் கிழக்கு பகுதிக்கு சென்ற நாம், அந்தப்பகுதி மக்களிடம் கேட்ட ஏகோபித்த குரல் இது.

வாழைக்குலை திருட்டில் தொடங்கி வீட்டுக்குள் புகுந்து வாயைக்கட்டிவிட்டு திருட்டு என அன்றாடம் வெளியாகும் செய்திகளே இதற்கு சாட்சி. யுத்தத்தின் பின்னர் போதைப்பொருள் பாவனையில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்பை போலவே, பல்வேறு சமூக விரோதச் செயற்பாடுகளும் அதிகரித்தன. அவற்றில் ஒன்றுதான் திருடர்களின் அட்டகாசம். அன்றாடம் இப்படியான திருட்டுச் செய்திகளிற்காக இடம் ஒதுக்க வேண்டியுள்ளது என்கிறார்கள் யாழிலுள்ள பத்திரிகைக்காரர்கள்.

ஒட்டுமொத்த யாழ்ப்பாணத்திலும் திருடர்களின் அட்டகாசம் உள்ளதுதான். முழித்திருக்க முழி தோண்டுபவர்கள் பற்றிய செய்திகள் தினமும் வந்தவண்ணமுள்ளன. நடமாடும் வியாபாரிகள் போல, விற்பனையாளர்கள் போல, வழிப்போக்கர்கள் போல வருபவர்கள் பரவலாக கைவரிசை காட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆடு, மாடு, சிறிய பொருட்கள் என அவர்களின் திருட்டுப்பட்டியல் நீள்கிறது.


இந்தவகையான திருடர்கள் ஒருவகையென்றால், மற்ற வகை மகா திருடர்கள். வாள்கள், கத்திகளுடன் வீடுடைத்து புகுந்து திருடுபவர்கள். இவர்கள்தான் தற்போது அச்சுறுத்தலானவர்களாக மாறியுள்ளனர். எதிர்ப்பவர்களை மிருகத்தனமாக தாக்கும் இந்த கும்பல் கொலைக்கும் அஞ்சாத பாதகர்கள். யாழில் திருடர்களால் கொல்லப்பட்டவர்களின் பட்டியலும் உள்ளது.

குடாநாட்டில் ஆங்காங்கே பரவலாக நடந்து வந்த இந்த கொள்ளைகள் இப்பொழுது வலிகாமம் கிழக்கில் மையம் கொண்டுவிட்டது. திருடர்களின் கோட்டையாக நமது பிரதேசம் மாறிவிட்டதா என்பதே அந்தப்பகுதி மக்களின் இன்றைய அங்கலாய்ப்பு.

இந்த வருடத்தில் மட்டும் வலிகாமம் கிழக்கில் சுமார் இருபது திருட்டு சம்பவங்கள் நடந்துள்ளதென்கிறார்கள். கடந்த இரண்டு மாதமாக பொலிசாரின் நடவடிக்கைகள் முடுக்கிவிட்டதை தொடர்ந்துதான் திருடர்களின் கொட்டம் அடங்கியுள்ளது. முகத்தை கறுப்புத்துணியால் மூடிக் கொண்டு, பயங்கர ஆயதங்களுடன் வரும் திருடர்கள் வீடுஉடைத்து உள்நுழைந்து திருடுகிறார்கள். வீட்டில் ஆட்கள் இருக்கிறார்களா, இல்லையா என்பது அவர்களிற்கு பிரச்சனையில்லை.

முன்னர் ஒவ்வொரு வீடாக உடைத்த திருடர்கள், இப்பொழுது வரிசையாக பல வீடுகளை உடைக்க தொடங்கி விட்டனர். கோப்பாயில் அண்மையில் ஏழு வீடுகள் ஒரே இரவில் உடைக்கப்பட்டது. நீர்வேலியின் கரந்தாயில் ஒரே இரவில் ஆறு வீடுகள் உடைக்கப்பட்டன. அன்று மொத்தமாக 50 பவுண் நகை, 25 இலட்சம் ரூபா பணம் திருட்டு போனது.

கோப்பாய் பிராமணவோடையில் வசிக்கும் குருக்கள் ஒருவரின் வீட்டிலும் திருடர்கள் கைவரிசை காட்டியுள்ளனர். அந்த திருட்டுக்கும்பல் நீர்வேலியில் வரிசையாக ஆறுவீடுகளை உடைத்த பின்னர் இவரது



**ப. குருநாதக்குருக்கள்**
கோப்பாய்

கடந்த 19 ஆம் திகதி அதிகாலை ஒருமணி இருக்கும். வீட்டுக்கதவை யாரோ உடைக்கும் சத்தம் கேட்டது. நானும் மனைவியும் பெரிதாக கத்தி உதவி கேட்டோம். வெளி மின்விளக்குகளை ஒளிரவிட்டோம். அயல்வீட்டுக்காரர்களும் பயத்தால் உதவிக்கு வரவில்லை. அரைமணித்தியாலம் மினைக்கெட்டு கதவை உடைத்துக் கொண்டு நான்கு திருடர்கள் உள்ளே வந்தனர். முகத்தை மூடி கறுப்புத்துணி கட்டியிருந்தனர். நாங்கள் பெரிதாக கத்தினோம். கையிலிருந்த கொட்டனால் ஒருவன் எனக்கு ஓங்கி அடித்தான். நான் அப்படியே இருந்துவிட்டேன். இன்னொருவன் கத்தியை காட்டி மிரட்டி எனது மனைவி அணிந்திருந்த தாலி, சங்கிலி, காப்பு, மோதிரங்களை கழற்றி எடுத்தான்.

பிறகு ஒவ்வொரு அறையாக தேடுதல் நடத்தினார்கள். ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா கோயில் பணத்தையும், எனது நகைகளையும் எடுத்தனர். மொத்தமாக அன்று பதினைந்து பவுண் நகைகளை எடுத்தனர்.

பின்னர் வெளி மின்விளக்குகளை அணைக்கச் சொன்னார்கள். சத்தம் போடக்கூடாதென மிரட்டி, வீட்டுகதவை பூட்டிவிட்டு தப்பிச் சென்றுவிட்டனர். அதன் பின்னர்தான் அயலவர்கள் வந்தார்கள்.

ST. ANTONY'S MULTI
No. 04, Mout Carmel Road, Jaffna.

தெட்டத்தெளிவான பார்வையோடு தென்னிந்திய புதிய, பழைய, இடைக்கால திரைப்படங்களின் DVD, CD, றெஸ்லிங் DVD கள், மற்றும் பாவனையை வழங்குகின்ற இலத்திரனியல் பொருட்கள், இக்காலத்திற்கு ஏற்றால் போன்ற கைத்தொலைபேசிகளையும் உத்தரவாதத்துடன் தருகின்றார்கள். தொலைபேசிக்கான மீள் நிரப்பு சேவையும் அங்குண்டு.



வீட்டுக்கு சென்றுள்ளது. ஏற்கனவே உடைத்த வீடுகளில் எடுக்கப்பட்ட டோர்ச்லைட், கத்தி, கொட்டன் என்பவற்றுடனேயே குருக்கள் வீட்டுக்குள் நுழைந்துள்ளனர். திருடி முடிந்ததும் அவற்றை குருக்கள் வீட்டிலேயே போட்டுவிட்டு சென்றுவிட்டனர். பொலிசார் மீட்ட அந்த தடயப்பொருட்களை பின்னர் உரியவர்கள் அடையாளம் காட்டினார்கள்.

பல திருட்டு சம்பவங்கள் நடந்தபோதும் திருடர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் என்னவோ மிகக்குறைவுதான். இதுதான் திருட்டு தொழில் செய்பவர்களிற்கு உள்ள ஒரே நம்பிக்கை.

திருடர்களின் தொல்லை கட்டுக்கடங்காமல் செல்வதையடுத்து நீர்வேலி பகுதி மக்கள் புதியவழியொன்றை கடைப்பிடிக்கிறார்கள். திருடர்கள் நடமாட்டத்தை அறிந்தால் உடனே பட்டாசு கொளுத்திப் போடுகிறார்கள். ஊர்மக்கள் உடனே திரள்வதால் திருட்டுக்களை முறியடிக்க முடிகிறது. அண்மையில் திருடர் கூட்டமொன்று அப்படி விரட்டியடிக்கப் பட்டுள்ளது.

பலபகுதிகளில்மக்கள்விழிப்புக்குழுக்களை அமைத்துள்ளனர். இரவுநேரங்களில் சிறுசிறு குழுக்களாக வீதியில் ரோந்து நடவடிக்கைகளை செய்கிறார்கள். இதுவும் நல்ல பலனை கொடுத்துள்ளது. விழிப்புகுழுக்கள் உள்ள பகுதிகளில் திருட்டு சம்பவங்கள் குறைந்துள்ளதாக கூறப்படுகிறது.

திருடர்களின் அச்சுறுத்தல் வலிகாமம் கிழக்கில் பல கிராமங்களின் இயல்பு வாழ்க்கையை புரட்டிப் போட்டுவிட்டது என்பதே உண்மை. திருடர் பற்றிய அச்சத்தில் ஒவ்வொரு இரவையும் நிம்மதியின்றி கழிக்கும் குடும்பங்கள் ஏராளம். சமூகத்திற்கே பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ள திருட்டு கலாசாரத்திற்கு கறாரான நடவடிக்கைகள்தான் தீர்வாக அமையும்.

**மி**கத் திட்டமிட்டே இந்த திருட்டுக்கள் நடக்கின்றன. கோப்பாய் பிராமணவோடை பகுதியில் உள்ள வீட்டுநாய்கள் அண்மையில் மர்மமான முறையில் இறந்தன. தொடர்ச்சியாக நாய்கள் மர்மமாக இறந்ததை தொடர்ந்தே, யாரோ விசமருந்து கொடுத்து நாய்களை கொல்வது தெரிந்தது. முதலில் நாய்களை கொன்றுவிட்டு, பின்னர் அந்தப்பகுதியில் கொள்ளைகள் நடந்துள்ளன.

மின்சாரம் துண்டிக்கப்பட்ட சமயங்களையும் வாய்ப்பாக பயன்படுத்துகிறார்கள். சில பிரதேசங்களில் திருடர்களே மின்இணைப்பை சேதப்படுத்தி திருட்டில் ஈடுபடுகிறார்கள்.

பகலில் நவநாகரிகமாக உடையுடுத்தி வீதிகளில் திரிந்து நோட்டம் விடுகிறார்கள். வயோதிபர்களின் வீடுகள், பெண்கள் அதிகமுள்ள வீடுகள், தனித்திருக்கும் வீடுகள், பிரதானவீதிகளிலிருந்து தொலைவில் உள்ள வீடுகள் இலக்கு வைக்கப்படுகின்றன.

நள்ளிரவிற்கு கிட்டவாக ஓடுபிரித்து, கதவுடைத்து உள்நுழைகிறார்கள். அல்லது, முன்னிரவில் வீட்டுக்காரர்கள் அசந்திருக்கும் சமயத்தில் உள்நுழைந்து பதுங்கியிருந்துவிட்டு, ஊரடங்கிய பின்னர் கைவரிசையை காட்டுகிறார்கள்.



**தி**ருடர்கள் வீட்டுக்குள் புக முயன்றாலோ, திருடர்கள் வந்துவிட்டதாக சந்தேகம் எழுந்தாலோ உடனடியாக பொலிசாருக்கு தகவல் கொடுங்கள். 119 அவசர அழைப்பு இலக்கத்தை தொடர்பு கொண்டு உதவி கோரலாம்.

அருகிலுள்ள வீடுகளிலுள்ளவர்கள் குழுவாக செயற்படலாம். சங்கேத வார்த்தைகள், செயற்பாடுகள் வைத்துக் கொள்ளலாம். (உதாரணம் பட்டாசு கொளுத்திப் போடுவது)

பகலில் வீடுகளிற்கு வரும் சந்தேகத்திற்கிடமானவர்கள் பற்றி எச்சரிக்கையாக இருங்கள். வீட்டின் அமைப்பை அவர்கள் பார்க்க அனுமதிக்காதீர்கள்.

அயல்வீடுகளில் வித்தியாசமான சத்தம், நடமாட்டங்கள் தெரிந்தால் பக்கத்திலுள்ளவர்களையும் எச்சரித்து அங்கு சென்று பார்க்கலாம்.

முக்கியமாக, அயல்வீட்டுக்காரர்களுடன் சுமுகமான உறவை பேணுங்கள்.

---

# ‘காணாமல் போனவர்களை மனைவிமாரே கைவிட்டு விட்டனர்’

## அனந்தி ஆவேசம்

செல்வம்
selvam@deepam.lk



அனந்தி என்றால் அணுகுண்டு. அண்மைக் காலம் வரை இப்படித்தான் செய்திகள் வந்த வண்ணமிருந்தன. அனல் பறக்கும் அறிக்கைள், அதிரடி நடவடிக்கைகள் என அண்மைக்காலம் வரை எல்லோராலும் கவனிக்கப்பட்டு கொண்டிருந்த அனந்தி திடீரென காணாமல் போனவர்கள் பட்டியலில் இணைந்துவிட்டார்.

ஜனாதிபதி தேர்தலில் மக்கள் வாக்களிக்க கூடாதென்ற அறிக்கை, பாராளுமன்ற தேர்தலில் சீட் கேட்டு கேட்டு அடம்பிடித்த செய்திகள் எல்லாம் அவர் பற்றிய பிம்பத்தை கணிசமாக தகர்த்தது. அதன்பின் அவ்வளவாக செய்திகளில் அடிபடாமலிருந்த அனந்தியை சுழிபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்தோம்.

**கேள்வி: மாகாணசபை தேர்தலில் அனந்தி பரபரப்பாக பேசப்பட்டார். தேர்தல் முடிந்து இரண்டு வருடங்களாகிவிட்டது. இப்பொழுது அனந்தியை எல்லோரும் மறந்து விட்டார்கள் போலுள்ளதே?**

***அனந்தி:*** அன்றிலிருந்து இன்றுவரை கொள்கை மாறாமல் செயற்பட்டு வருகிறேன். ஆட்சிமாற்றத்தின் பின் எனக்கான ஊடக ஆதரவு இல்லாமல் போய்விட்டது. ஏதோ ஒரு பின்னணியில் உள்ளூர் ஊடகங்கள் என்னுடைய செய்திகளை பிரசுரிக்க மறுக்கின்றன. பல நிகழ்வுகளில் கலந்து கொள்கின்ற போதும் எனது படம் வராத அளவில் வெட்டப்பட்டு பிரசுரிக்கப்படுகின்றது.

மாகாணமட்டத்தில் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் தேசியமட்டத்தில் தீர்;க்கப்படும். தேசியமட்டத்தில் தீர்க்கப்படாவிட்டால் சர்வதேசமட்டத்தில் தீர்க்கப்படும். நான் இப்பொழுது சர்வதேச மட்டத்தில் தான் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வுக்காக பேசிக் கொண்டிருக்கிறேன். புதிய ஜனாதிபதியின் ஆட்சியிலும் எமது பிரச்சினைகள் தொடர்கின்றன.

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான நாடுகளில் உள்ள அரசியல் பிரமுகர்கள், புத்திஜீவிகளிடம் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு தீர்வுவேண்டும் என்பதை வலியுறுத்தி வருகிறேன். அண்மையில் ஐ.நாவில் இந்தவிடயம் சம்பந்தமாக பகிரங்கமாக இரு தடவைகள் பேசியிருக்கிறேன். இந்தசெய்திகளைக் கூட உள்ளூர் ஊடகங்கள் இருட்டடிப்பு செய்திருக்கின்றன. போரில் பாதிக்கப்பட்ட பெண்ணாக நான் நியாயம் கேட்டு நிற்கின்ற செய்தியை சர்வதேச ஊடகங்கள் பிரசுரித்திருக்கிறார்கள். உள்ளூர் ஊடகங்கள் என்னுடைய செய்திகளை இருட்டடிப்பு செய்வதால் நான் என்ன செய்கிறேன் என்பது மக்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனாலும் நான் தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்துக் கொண்டிருப்பேன்.

**கேள்வி: காணாமல்போனவர்கள் பற்றிய தகவலை கோரி உங்கள் தலைமையில் நடத்தப்பட்ட போராட்டங்கள் என்ன நிலையில் உள்ளது?**

***அனந்தி:*** ஆட்சிமாற்றம் எங்களுக்கு பல முட்டுக்கட்டைகளைப் போட்டிருக்கிறது. சர்வதேசத்தை திருப்திப்படுத்துகின்ற இலங்கையின் செயற்பாடு காரணமாக காணாமல் போனோருக்கான செயற்பாடு நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது காணாமல்போனோருக்கு சான்றிதழ் கொடுக்கிறார்கள். ஆனால் சரணடைந்தவர்களுக்கு இவ்வாறு சான்றிதழ் கொடுக்கமுடியாது. ஏனென்றால் நாங்கள் நேரடியாக ஒப்படைத்தவர்கள். இந்தசான்றிதழ் காலப்போக்கில் மரணச்சான்றிதழாகவும் மாறும். பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கம் இவ்வாறான கால இழுத்தடிப்பைச் செய்வதும் மக்களை மௌனமாக வைத்திருப்பதற்காகவே.

அண்மைக்காலமாக நாங்கள் இந்தப் போராட்டங்களை முன்னெடுப்பதில் சோர்ந்து போய்விட்டோம். காணாமல் போனவர்களின் மனைவிமார் போராட்டங்களில் இருந்து ஒதுங்கியிருக்கின்ற நிலையில் பெற்றோர்தான் போராட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**கேள்வி: இறுதிப் போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்களின் பெயர் விபரங்களை முல்லைத்தீவு நீதிமன்றில் சமர்ப்பிப்பதாக இராணுவம் கூறியுள்ளது. உங்கள் கணவரும் அங்கு சரணடைந்ததாக கூறுகிறீர்கள். அவை பற்றிய விபரங்கள் வெளியாகுமா?**

***அனந்தி:*** மஹிந்த காலத்தில் இந்த வழக்கு நீதிமன்றுக்கு கொண்டு வரப்படுமோ என்ற ஐயமிருந்தது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் அண்மையில் பதியேற்ற ஒரு முஸ்லிம் நீதிபதியால் இந்த வழக்கு எடுக்கப்பட்டது. அதனால் அவருக்கு நாங்கள் நன்றி கூறக் கடமைபட்டுள்ளோம்.

58 ஆவது படையணி தளபதி சவீந்திர சில்வாவுக்கு எதிராக போடப்பட்ட வழக்கில் அவர் சமூகம் அளிக்காமல் அவர் தரப்பில் ஒரு கேணல் தர அதிகாரி வழக்கிற்கு வந்திருந்தார். அவர் சாதாரண அதிகாரி அல்ல. அமெரிக்கா, பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஸ் போன்ற நாடுகளில் அவர் படித்திருக்கின்றார். எனவே அவரது கூற்றை பொய்யான கூற்றாக எடுக்க முடியாது.

இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்களின் பெயர் பட்டியல் இருப்பதாகவும் ஆனால் வழக்கு போட்டவர்களின் பெயர் அதில் இல்லை என்றும் தெரிவிக்கின்றார். எதிர்வரும் வழக்கில் பெயர் பட்டியலை சமர்ப்பிக்குமாறு நீதிபதி அவரிடம் உத்தரவு இட்டிருக்கிறார். எனவே எதிர்வரும் ஏப்ரல் மாதம் வருகின்ற வழக்கில் தான் இவர் எப்படிப்பட்ட பெயர் பட்டியலை சமர்ப்பிக்கப் போகின்றார் என்பது தெரியவரும்.

**கேள்வி:** வடமாகாணசபை உருவானதும் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை பிறந்தது. எதையாவது செய்வார்கள் என எதிர்பார்த்தனர். ஆனால், தமக்குள் முட்டுப்படுவதிலேயே வடமாகாணசபை காலத்தை கடத்துகிறதே. நிதி மோசடிக்குற்றச்சாட்டுக்களும் கிளம்புகின்றனவே?

***அனந்தி:*** ஆசியாவில் ஊழல்;மோசடிகள் மலிந்திருக்கின்ற நிலையில் வடமாகாணசபையிலும் சில மோசடிகள் இடம்பெற்றிருப்பதை அவதானித்திருக்கிறோம்.

இங்கு இடம்பெறும் ஊழல்கள் மோசடிகள் தொடர்பாக எனக்கும் கடிதங்கள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. இதுபற்றி முதலமைச்சரிடம் பேசியிருக்கின்றேன். வெறுமனே கடிதங்களை வைத்துக் கொண்டு ஒரு முடிவு எடுக்க முடியாது. எனவே விசாரணையை மேற்கொள்ளுமாறு முதலமைச்சரிடம் கோரியிருக்கின்றேன்.

**கேள்வி: இறுதிப் போரில் உங்களது கணவரை இராணுவத்தினரிடம் ஒப்படைத்த சாட்சியாக இருக்கின்றீர்கள். உங்களது கணவர் சம்பந்தமாக ஏதாவது தகவல் அறிந்திருக்கிறீர்களா?**

***அனந்தி:*** இல்லை. இராணுவத்தினரிடம் கையளித்த பிற்பாடு இன்று வரை எனது கணவரை காணவும் இல்லை, தொடர்பு கொள்ளவுமில்லை. அவர் பற்றிய தகவல்களிற்காகத்தான் இன்றும் போராடிக் கொண்டிருக்கிறேன். வழக்கு விசாரணைக்கும் இந்தப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றேன். எனது கணவர் சிங்கப்பூரில் இருக்கிறார் என்று சிலர் வதந்தியைக் கிளப்பிவிட்டிருக்கிறார்கள். கணவர் அங்கு இருந்தால் நான் இந்த இடத்தில் இருக்க மாட்டேன். இலங்கை அரசுடன் நெருங்கிய தொடர்பினை பேணிவருகின்றார் என்றும் என்மீது குற்றங்களை சிலர் சுமத்துகின்றனர்.

**கேள்வி: வடமாகாணத்தில் பெண்களிற்கு எதிரான வன்முறைகள் கட்டுங்கடங்காமல் செல்கிறது. இந்த விடயத்தில் வடமாகாணசபை மெத்தனமாக உள்ளதைப் போலுள்ளதே?**

***அனந்தி:*** வடமாகாண சுகாதார அமைச்சின் கீழேதான் மகளிர் விவகாரம் உள்ளது. சுகாதாரஅமைச்சர் இதற்கான நடவடிக்கையை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அப்படியொன்றும் செய்யவில்லை. உதவிப் பிரதேச செயலராக இருக்க வேண்டிய ஒரு பெண்மணியை மகளிர் விவகாரத்துக்கு பொறுப்பாக சுகாதார அமைச்சு நியமித்துள்ளது.




சம்பூர் கணவரை இழந்த பெண்களுக்கான வீடமைப்புத் திட்டம்:

# கனடிய தமிழர் பேரவையினால் கட்டி முடிக்கப்பட்ட 18 வீடுகள் கையளிப்பு!

திருகோணமலை மாவட்டத்தின்; மூதூர் பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள 24 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட பகுதி பொதுவாகச் சம்பூர் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது.

'சம்பூர்' எனக் சுட்டப்படும் மேற்படி பகுதியில் 2006ஆம் ஆண்டில் 1853 குடும்பங்களைச் சேர்ந்த 7046 மக்கள் வாழ்ந்து வாழ்ந்து வந்தனர் 2006 சித்திரைத் திங்களில் மாவிலாற்றில் தொடங்கி நடைபெற்ற போரின் விளைவாக முன்கூறிய 1853 குடும்பங்களும் இடம்பெயர வேண்டிய சூழ்நிலை



ஏற்பட்டது. பல்வேறு இடப்பெயர்வுகளுக்குப் பின்பு இவர்கள் சம்பூருக்கு அண்மையில் உள்ள கிளிவெட்டி, பட்டித்திடல், மணற்சேனை, கட்டைப்பறிச்சான் ஆகிய ஊர்களில் அமைக்கப்பட்ட முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

எனினும், முதலீட்டு ஊக்குவிப்பு வலயம், உயர் பாதுகாப்பு வலயம் ஆகியவற்றைக் காரணமாகக் காட்டிச் சம்பூர் மேற்கு, சம்பூர் கிழக்கு, கடற்கரைச் சேனை ஒரு பகுதி ஆகியவற்றில் வாழ்ந்து வந்த 825 குடும்பங்களைச் சேர்ந்த 2598 மக்கள் மீள்குடியேற ஒப்புதல் அளிக்கப்படவில்லை.

2015 தைத் திங்களில் இலங்கையில் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தின் பின்பு புதிதாக வந்த அரசு இக்காணிகளை விட முனைந்தாலும், முதலீட்டு ஊக்குவிப்பு வலயக் குத்தகைக்கு எடுத்த 'கேற்வே' என்ற நிறுவனம் பல்வேறு தடைகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எம்.ஏ. சுமந்திரன், மாண்புமிகு இரா சம்பந்தன் ஆகியோர் நீதிமன்றம் சென்று இத்தடைகளை அகற்றிய பின்பு முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்கென ஒதுக்கப்பட்ட 818 ஏக்கர் நிலம் 2015 ஆவணி 22ஆம் நாளன்று விடுவிக்கப்பட்டு 367 குடும்பங்கள் மீள்குடியமர ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்த 367 குடும்பங்ளில் 41 குடும்பங்கள் பெண்களால் தலைமை தாங்கப்படும் குடும்பங்களாகும்.

இந்த 41 குடும்பங்களுக்கும் வீடமைக்கும் பணியைக் கனடியத் தமிழர் பேரவை பொறுப்பேற்றது. இதற்கு நிதிசேகரிக்கும் பொருட்டாக 2015 புரட்டாதி 13ஆம் நாள் நாம் ஒரு நிதிசேர் நடையை மேற்கொண்டது. திருகோணமலை நலன்புரிச் சங்கம் இதில் பங்காளராக இணைந்திருந்தது. இந்த நிகழ்ச்சியின் வாயிலாக 41 வீடுகளையும் அமைப்பதற்காக ஓர் இலட்சம் டொலர் நிதியைத் திரட்டப்பட்டது.

இந்த 41 வீடுகளில் 18 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, இவற்றைக் கையளிக்கும் விழா 2016.03.26 ஆம் நாள் காலை ஒன்பது மணிக்குச் சம்பூரில் நடைபெற்றது. இலங்கை அரசின் மீள் குடியேற்ற அமைச்சர் மாண்புமிகு எம். சுவாமிநாதன், எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு இரா சம்பந்தன், கிழக்குமாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்ணாண்டோ, கிழக்குமாகாண முதலமைச்சர் கபிஸ் நசீர் அகமட், கிழக்குமாகாண மீள்குடியேற்ற அமைச்சர் சி தண்டாயுதபாணி, கிழக்குமாகாண வேளாண்மைத் துறை அமைச்சர் க. துரைராசசிங்கம், கிழக்குமாகாணச் சாலை அபிவிருத்தி அமைச்சர் ஆரியவதி கலப்பதி, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரத்தினசிங்கம், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் எஸ் புஸ்பகுமார உள்ளிட்ட பெருமக்களோடு பெருந்திரளான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

இலங்கை அரசின் மீள் குடியேற்ற அமைச்சர் மாண்புமிகு எம். சுவாமிநாதன், எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு இரா சம்பந்தன், கிழக்குமாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்ணாண்டோ, ஆகியோர் நாடாவைவெட்டித் திறப்புகளைக் கையளித்து 18 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வீடுகளைக் கையளித்தனர்.

இதுதொடர்பான காட்சிப் படங்கலை இங்கே காண்க. எஞ்சியுள்ள 23 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான வீடமைக்கும் பணிகள் இன்னும் இரண்டு மாதத்துள் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, சம்பூர் பிரதேசத்தில் கடற்படை முகாம் இருந்த பகுதியில் 177 ஏக்கர் காணியை இரண்டாவது கட்டமாக உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் நடவடிக்கை கடந்த வெள்ளிக்கிழமை(25) நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் அவர்கள் உரையாற்றுகையில் 'சம்பூரைச் சேர்ந்த பலர் தினமும் என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு இங்கு நிர்மாணிக்கப் படவுள்ளதாக சொல்லப்படும் அனல் மின் நிலையம் பற்றிய பிரச்சினைகளைப் பற்றி என்னுடன் கலந்துரையாடுகின்றனர். நான் நினைத்தால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனோ அல்லது பிரதமருடனோ அல்லது இந்தியப் பிரதமருடனோ கலந்துரையாடி அனல் மின் நிலையத்தை நிறுத்தியிருக்கலாம் ஆனால் சம்பந்தன் ஐயா இதைச் செய்கிறார் இல்லை என அவர்கள் கூறுகின்றனர்.


அனல் மின் நிலையம் தொடர்பிலும் அதனால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பிலும் நான் விசாரித்துள்ளேன். இதனால், இரண்டு வகையான பாதிப்புகளே ஏற்படும். நிலக்கரியை எரிப்பதால் ஏற்படும் தூசியும் இதனால் பரவக்கூடிய சாம்பல் ஆகியனவே இப்பாதிப்புகளாகும். எனவே, இவ்வாறான தீமைகள் ஏற்படவும் எமது மக்களுக்கு அநீதி ஏற்படவும் நாம் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம்.

சுற்றப்புறச்சூழல் தொடர்பாக அரசாங்கத்துக்கும் எமக்கும் பல பொறுப்புகள் உள்ளன. இவ்விடயம் தொடர்பாக மீண்டுமொரு முறை சம்பூர் மக்களை நாம் சந்திப்போம். அப்போது மக்களின் கருத்துகள் தொடர்பிலும் நிபுணர்களின் கருத்துகள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்படும். இவ்விடயம் தொடர்பாக அனைவரும் நிதானமாக சிந்திக்க வேண்டும்' என்று தெரிவித்தார்.

'திருகோணமலை மாவட்டத்துக்கு பல்வேறு புதிய திட்டங்கள் பல நாடுகளின் மூலம் கிடைத்த வண்ணமுள்ளன. அண்மையில் சிங்கப்பூர் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் என்னை இரண்டு தடவைகள் சந்தித்துள்ளார். திருகோணமலை மாவட்டத்தில் அபிவிருத்தி தொடர்பாக பாரிய திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளனர். இவ்வாறான திட்டங்கள் இலங்கைக்கு இன்று தேவையானதே' எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.







# ஜனாதிபதி ஆணைக்குழு முன் கண்ணீர் சாட்சியங்கள்

வ.நரேஜி


யுத்தம் முடிவடைந்து 7 ஆண்டுகள் கடந்த நிலையிலும் காணாமல் போனவர்கள் தொடர்பில் உறவுகள் போராட்டம் தொடர்கிறது. முன்னைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட காணாமல் போனோர் தொடர்பான விசாரணை செய்யும் மெக்ஸ்வெல் பரணகம் தலைமையிலான ஆணைக்குழுவின் பதவிக்காலம் தொடர்ந்தும் நீடிக்கப்பட்ட நிலையில் மக்கள் தமது சாட்சியங்களை பதிவு செய்து வருகின்றனர். அந்த வகையில் ஆணைக்குழுவின் அமர்வுகள் கடந்த 25 அம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை வன்னியின் முல்லைத்தீவு மன்னார் வவுனியா ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்றது.

விசாரணையில் ஆயிரத்து 49 பேர் சாட்சியமளித்துள்ளதுடன். 306 பேர் புதிதாக விண்ணப்பித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 25 ஆம் திகதி 290 பேருக்கு அழைப்பு விடுத்திருந்த நிலையில் 141 பேர் சாட்சியமளித்ததுடன் 23 பேர் புதிதாக விண்ணப்பித்திருந்தனர். 26 ஆம் திகதி முல்லைத்தீவில் 290 பேருக்கு அழைப்பு விடுவிக்கப்பட்ட நிலையில் 120 பேர் சாட்சியமளித்ததுடன். 18 பேர் புதிதாக விண்ணப்பித்திருந்தனர். 27 ஆம் திகதி 294 பேருக்கு அழைப்பு கடிதங்கள் அனுப்பிய நிலையில் 196 பேர் சாட்சியமளித்ததுடன் 69 பேர் பதிதாக விண்ணப்பித்தனர்.

மன்னாரில் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்ற ஆணைக்குழு விசாரணையின் போது 257 பேருக்கு அழைப்பு கடிதங்கள் அனுப்பப்பட்ட போதும் 170 பேர் வருகை தந்ததுடன் 41 புதிய விண்ணப்பங்களும் கிடைத்தது. வவுனியாவில் கடந்த 29-30 ஆம் திகதிகளில் நடைபெற்ற நிலையில் செவ்வாய்கிழமை 311 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் 238 பேர் சாட்சியமளித்ததுடன் 79 பேர் புதிதாக விண்ணப்பித்திருந்தனர். இறுதிநாள் 218 பேருக்கு அழைப்பு கடிதம் அனுப்பிய நிலையில் 183 பேர் சாட்சியமளித்ததுடன் 76 புதிய விண்ணப்பங்களும் கிடைத்தது.

இதன்படி கடந்த ஆறு நாட்களில் வன்னியின் மூன்று மாவட்டங்களிலும் நடைபெற்ற ஆணைக்குழு விசாரணையில் 1660 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில் 1049 பேர் சாட்சியமளித்திருந்ததுடன் 306 விண்ணப்பங்களும் கிடைக்கப்பெற்றுள்ளது. இவ் சாட்சியம் அளிப்பின் சில பதிவுகளே இவை..




### சிவசுப்பிரமணியம் இராசமலர்



நாங்கள் குடும்பத்துடன் நெடுங்கேணியில் வசித்து வந்தோம். யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து முல்லைத்தீவு சென்று அங்கு புதுக்குடியிருப்பு முள்ளியவாய்க்கால் என பல இடங்களில் மாறி மாறி இருந்தோம். யுத்தம் காரணமாக தொடர்ந்து ஒரு இடத்தில் இருக்க முடியவில்லை. அப்பொழுது விடுதலைப்புலிகள் எனது மகன் சிவசுப்பிரமணியம் சிவதீபனை (வயது 26) பிடித்துச் சென்றனர். மகன் அவர்களிடம் இருந்து தப்பி ஓடி வந்து எம்முடன் நின்றான் யுத்தம் தீவிரமடைந்த போது 2009 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதி புதுக்குடியிருப்பு பகுதியூடாக இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்குள் வந்தோம். அப்போது எனது மகனை இராணுவம் கூப்பிட்டது. நாம் அவனை எம்முடன் அனுப்புமாறு கோரினோம். அவனை விசாரித்து விட்டு நாங்கள் இருக்கும் முகாமில் காண்டு வந்து விடுவதாக இராணுவத்தினர் தெரிவித்தனர். இதன்பின் நாங்கள் இடம்பெயர்ந்து இராமநாதன் முகாமுக்கு வந்து விட்டோம். எனது கணவருக்கும் மூன்று பிள்ளைகளுக்கும் காயம். அவர்கள் இன்றும் இயலாத நிலையிலேயே உள்ளனர். நான் இராணுவத்திடம் உயிருடன் ஒப்படைந்த எனது பிள்ளை தான் எனக்கு வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதன்போது ஆணைக்குழுவினர் உங்களுக்கு சமுர்த்தி வீட்டுத்திட்டம் என்பன கிடைத்துள்ளதா என கேட்ட போது எமக்கு எதுவும் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தார். சமுர்த்தி வழங்குமாறு நாம் அறிவுறுத்துகிறோம் என ஆணைக்குழுவினர் தெரிவித்தனர். இதன்போது தயார் எமக்கு எதுவும் வேணாம். பிச்சை எடுத்தாவது நாம் வாழுவோம். உயிருடன் கொடுத்த எனது பிள்ளை தான் வேண்டும் என கண்ணீர் விட்டழுதார். இதனையடுத்து ஆணைக்குழுவின் சட்ட நடவடிக்கைக்காக அவருடைய விபரங்கள் பெறப்பட்டது.

### காசிப்பிள்ளை வனஜா



நாம் வவுனியா வடக்கில் இருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து பல இடங்களுக்கும் சென்றோம். தரப்பாள் கொட்டகைகளுக்கு கீழ் பதுங்குகுழி அமைத்து நாம் வாழ்ந்து வந்த போதிலும் செல் தாக்குதலின் காரணமாக ஒரே இடத்தில் வசிக்க முடியாமையால் குடும்பத்துடன் ஓடினோம். அப்போது இரட்டைவாய்க்கால் பகுதியில் இராணுவ சீருடை அணிந்து வந்த ஆயுதம் தரித்த இளைஞர் குழுவொன்று இளம் பிள்ளைகளை பிடித்தார்கள். அவர்கள் யார் என்பதனை என்னால் ஊகிக்கமுடியவில்லை.

அப்போது நான் எனது மகளான காசிப்பிளை ஜெரோமியை அணைத்து பிடித்திருந்த போது என்னை தாக்கிவிட்டு எனது பிள்ளை அவர்கள் பிடித்து சென்றார்கள். அங்கு எனது பிள்ளை மாத்திரமன்றி பல இளம் வயதினரை அவர்கள் பிடித்து வாகனத்தில் எற்றிச்சொன்றார்கள். அப்பிரதேசம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த போதிலும் இராணுவம் அப்பகுதியில் முன்னேறிக்கொண்டிருந்தது.

இவ்வேளையில், நான் விடுதலைப்புலிகளிடம் எனது மகளை பிடித்தீர்களா என கேட்டிருந்தேன். ஆனால் அவர்கள் இல்லை என்று தெரிவித்தனர்.

இந் நிலையில் நாம் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு வந்து வவுனியா இராமநாதன் முகாமுக்கு வந்து சேர்ந்தோம். இதன்போது எனது மகள் காணாமல்போனோர் பதிவிலேயே பதிவு செய்யப்பட்டு வருகின்றார். இவ்வாறான நிலையில் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபாலசிறிசேனவின் பிரசார சுவரொட்டியில் எனது மகளின் புகைப்படம் ஜனாதிபதியுடன் வந்திருந்ததை அவதானித்தேன்.

அதன் பின்னர் மகள் எங்கோ இருக்கிறாள் என்ற எண்ணத்தில் தேடினேன். ஜனாதிபதி யாழ்ப்பாணம் வந்தபோதும் நான் அவரிடம் படத்தை காட்டி கேட்டேன். அவர் அப்படத்தை தனது மடியில் வைத்து பார்த்துவிட்டு தடுமாறிவிட்டார். கடந்த 8 ஆம் மாதம் நான் அவரை சந்தித்தபோது காணாமல் போனோர் தொடர்பாக தான் எதனையும் கூற முடியாது எனினும், இது தொடர்பாக விசாரணை செய்து மகள் தொடர்பாக அறிவிப்பதாக தெரிவித்திருந்தார்.

ஆனால் இதுவரை எதுவும் கிடைக்கவில்லை. மகளை என்னுடன் விடாவிட்டாலும் பரவாயில்லை. மகள் எங்குள்ளாள் என்பதனையாவது காட்டுங்கள் என அவர் ஆனைக்குழுவிடம் மன்றாடினார்.

இந் நிலையில் ஆணைக்குழுவின் தலைவர் மெஸ்வெல் பரணகம சுவரொட்டி மற்றும் மேலதிக ஆவணங்களை பார்வையிட்டதன் பின்னர் அதன் பிரதிகளை காணாமல்போனோர் தொடர்பாக விசாரணை செய்யவுள்ள ஓய்வுபெற்ற மேல் நீதிபதி அடங்கிய குழுவிடம் கையளிப்பதாகவும் அவர்கள் விசாரணைகைள முன்னெடுப்பார்கள் எனவும் தெரிவித்தார்.

### கணேசு சதாசிவத்தின் மனைவி



நானும் எனது கணவர் மற்றும் பிள்ளைகள் கொழும்பு, களுபோவில பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வாடகைக்கு வசித்து வந்தோம். கடந்த 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதி இரவு 9 தொடக்கம் 10 மணிக்கிடையில் எமது வீட்டின் கதவை தட்டிச் சத்தம் கேட்டது. அப்போது எனது தம்பி கதவைத் திறந்தார். வீட்டிற்குள் நுழைந்த 5, 6 பேர் எனது கணவரை கூப்பிட்டார்கள். நான் நீங்கள் யார் என கேட்டோம். தாம் பொலிஸ் என கூறி எனது கணவரின்

தொடர்ச்சி 8-ம் பக்கம்

7-ம் பக்க தொடர்ச்சி

அடையாள அட்டை, பொலிஸ் வதிவிடச் சான்றிதழ் என்பவற்றை பார்த்துவிட்டு எனது கணவரை பிடித்து இழுத்துச் சென்றார்கள்.

நாங்கள் விடும்படி கதறினோம். எம்மை வீட்டுக்குள் விட்டு பூட்டிவிட்டு கணவனை இழுத்துச் சென்றார்கள். அதன்பின் எனது கணவனை 50 7062 இலக்க வாகனத்தில் ஏற்றிக் கொண்டு சென்றதைக் கண்டோம். நாம் வெள்ளவத்தையில் இருந்த எனது அப்பாவை வரவழைத்து கதவைத்திறந்து பொலிஸ் நிலையம் சென்று விசாரித்தோம். அவர்கள் கணவரை பிடிக்கவில்லை எனப் கூறினார்கள். அதன் பின் எனது கணவரை கொண்டு சென்ற வாகனத்தை பொலிஸ் நிலையத்தில் கண்டேன். அதைச் சென்று பார்த்த போது அதற்குள் வேறுபலர் இருந் தார்கள். அதற்குள் கணவனை காணவில்லை. எப்படியாவது எனது கணவரை கண்டுபிடித்து தாருங்கள். அவர் இருக்கின்றார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என கண்ணீர் மல்க சாட்சியமளித்தார்.

**பேரின்பராஜா பாலேஸ்வரி**



நாங்கள் முல்லைக்குளம், கல்மடுவில் வசிக்கின்றோம். கடந்த 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 08 ஆம் திகதி எனது கணவர் எமது பகுதியில் வசிக்கும் ஒருவருடன் வீட்டில் இருந்து மோட்டர் சைக்கிளில் வவுனியா நகரத்திற்கு சென்றார். காலையில் சென்றவர் 11.30 மணியளவில் வங்கியில் பணத்தை வைப்புச் செய்து விட்டு திரும்பி வந்து கொண்டிருந்த போது ஈச்சங்குளத் திற்கும் கல்மடுவிற்கும் இடையில் அமைக்கப் பட்டிருந்த இராணுவ காவலரண்கள் இரண்டின் அருகே வீதி தடை போடப்பட்டு மக்கள் அவ்வீதியால் செல்ல விடாமல் தடுக்கப்பட்டது. இதன்போது அந்த இராணுவக் காவலண் இரண்டும் அமைந் துள்ள பகுதிக்குள் வைத்து எனது கணவன் பேரின்பராஜா (வயது 34) மற்றும் அவருடன் சென்ற உதயகுமார் ஆகிய இருவரையும் 57 ஆவது படைப்பிரிவு இராணுவத்தினர் மோட்டர் சைக்கிளில் இருந்து இறக்கி வெள்ளை வாகனத்தில் ஏற்றிச் சென்ற னர்.

இதன்போது அவ்விடத்திற்கு அருகில் இருந்த எனது சகோதரி வீட்டில் இருந்த நான் எனது கணவனை கடத்தும் போது கண்ணால் கண்டேன். அந்த இராணுவத்தை இப்பொழுதும்என்னால் அடையாளம்காட்ட முடியும். நான் கணவன் நின்ற இடத்திற்கு செல்ல முற்பட்ட போது காவலரணில் இருந்த இராணுவம் என்னை செல்லவிடவில்லை. ஒரு காவலரணில் ஜெயவர்த்தன என்ற இராணுவ வீரர் இருந்தார். அவருக்கும் கடத்திய இராணுவத்தினரை தெரியும்.

அதன்பின் நான் இராணுவத்திடம் கேட்ட போது தாம் கடத்தவில்லை எனக் கூறிவிட்டார்கள். அதன்பின் பொலிஸ் நிலையம், மனித உரிமை ஆணைக்குழு, இராணுவ முகாம் என எனது மூன்று பெண் பிள்ளைகளுடனும் ஏறி இறங்கி வருகின்றேன். இறுதியாக உங்களிடம் வந்துள்ளேன் என கண்ணீர் மல்க சாட்சியமளித்தார்.

வன்னியின் சாட்சியமளிப்பு நிறைவுள்ள பின்னர் ஊடகவியலாளரிடம் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரணகம்,

காணாமல் போனோர் தொடர்பாக செய்யப்பட்ட முறைப்பாடுகள், சாட்சியங் களின் அடிப்படையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. தற்போது நான்கு பேர் கண்டறியப்பட்டுள்ளனர். அது தொடர்பில் விரைவில் வெளிப்படுத்துவோம். மாலைதீவு சிறைச்சாலையிலும் காணாமல் போனதாக கூறப்பட்ட இரண்டுஇ மூன்று பேர் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. வெலிஓயாப்பகுதியில் காணாமல் போனதாக எம்மிடம் கூறப்பட்ட நபரொருவர் வேறு ஒரு பெண்ணுடன் கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக வெளிநாடு சென்றமை அறியப்பட்டுள்ளது. ஏனையவர்கள் தொடர் பாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் போனோர் முழுமையாக கண்டு பிடிக்கப்படா விட்டாலும் சாதகமான பதில்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட சாட்சியப் பதிவுகளில் யாழ்ப்பாணத்தில் இராணுவத்திற்கு அதிகமான முறைப்பாடுகள் காணப்பட்ட அதேவேளை, வன்னியில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான முறைப்பாடுகள் அதிகம் பதிவாகியுள்ளது. இது தவிர காணாமல் போனோர் தொடர்பில் புளொட், ஈபிஆர்எல்எப், டக்ளஸ் அவர்களின் ஈபிடிபி போன்றனவர்களும் பதில் சொல்ல வேண்டியவர்களாகவுள்ளனர்.

தற்போது வன்னியில் ஆறு நாட்கள் மேற்கொண்ட அமர்வுகளில் 1049 பேர் சாட்சியமளித்ததுடன், 306 பேர் புதிதாக விண்ணப்பித்துள்ளனர். அந்தவகையில் புதிதாக விண்ணப்பிப்போர் தொகை அதிகரித்துள்ளது. இது மக்கள் எமது காணாமல் போனோர் ஆணைக்குழு மேல் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. இது தவிர, ஒருவர் தொடர்பாக அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பல பகுதிகளில் இருந்தும் விண்ணப்பித்துள்ளமையால் காணாமல் போனோர் தொடர்பான மொத்த எண்ணிக்கையை உடனடியாக வெளியிட முடியவில்லை எனவும் தெரிவித்தார்.











# வாருங்கள் ஒன்றாக சுவாசிப்போம்

எஸ்.என்.நிக்ஷன்

'வாருங்கள் ஒன்றாக சுவாசிப்போம்' என்ற தொனிப்பொருளில் வடக்குத் தெற்கு ஊடகவியலாளர்கள் ஒன்றிணைந்த குறிப்பிடத்தக்கதொரு நிகழ்வு கடந்த வாரம் வடக்கில் நிகழ்ந்தது. நல்லிணக்க முயற்சிகளின் ஒரு அங்கமாக இந்த நிகழ்வு இடம்பெற்றது. ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக, ஊடக பிரதி அமைச்சர் மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர் ஆகியோருடன் தெற்கிலிருக்கின்ற பல்வேறு ஊடகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் சிங்கள, முஸ்லிம் ஊடகவியலாளர்கள் சுமார் நூறுபேர் வந்திருந்தனர். மூன்றுநாள் பயணமாக வந்திருந்தனர்.

கடந்த காலங்களில் வடக்குத் தெற்கு ஊடகவியியலாளர்களுக்கு இடையிலான பாரிய தொடர்பாடல் தடைகள் இருந்தன. இரண்டு தரப்பும் எதிரெதிர் நிலையில் இருந்து இயங்கிக் கொண்டிருந்தார்கள். இலங்கைத்தீவின் நல்லிணக்க முயற்சிகள் வெற்றியடைய முதலில் ஊடகத்துறைக்குள் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமென்பதை அரசு உணர்ந்து கொண்டதையடுத்து இந்த பயணம் திட்டமிடப்பட்டிருந்தது.

ஊடக அமைச்சர் தனது வடக்கு பயணத்தில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் அதிக கரிசனை செலுத்தியிருந்தார். அவர்களது குடும்பங்களிற்கு உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன. ஊடகவியலாளர்களிற்கான உதவித்திட்டங்களும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. காணாமல் போன மற்றும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுக்க இந்த அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் உறுதியளித்திருந்தார்.

கடந்த மாதம் 26ம் திகதி கொழும்பிலிருந்து புகையிரதத்தில் அமைச்சர் தலைமையிலான குழுவின் பயணம் தொடங்கியது. வவுனியாவில் பிரதேச ஊடகவியலாளர்களால் அமைச்சர் குழு வரவேற்கப்பட்டது. இதுதான் வடக்கின் முதலாவது வரவேற்பு.

மதியம் 2 மணிக்கு யாழ்ப்பாணத்தை குழுவினர் வந்தடைவார்கள் என கூறப்பட்டிருந்த போதும் மாலை 5 மணியளவிலேயே வந்தடைந்தனர். யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள் புகையிரதநிலையத்தில் திரண்டு அமைச்சர் குழுவை வரவேற்றனர். பாரம்பரிய முறையுடன், பிரமாண்ட பேனா ஒன்றையும் வழங்கி வரவேற்றனர்.






மறுநாள் யாழ்ப்பாணத்தில் முக்கிய நிகழ்வுகள் நடந்தன. கொல்லப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் குடும்பங்களிற்கான உதவிப்பணம் வழங்கப்பட்டது. ஊடகவியலாளர்களிற்கான மோட்டார்சைக்கிள் வழங்கும் திட்டத்திற்கான கடிதங்களும் வழங்கப்பட்டன. கொல்லப்பட்ட ஊடகவியலாளர் ஒருவரின் குடும்பத்திற்கான வீட்டுத்திட்ட அடிக்கல்லையும் அமைச்சர் நாட்டினார்.

மூன்றுநாள் பயணத்தின் நிகழ்ச்சிநிரலில் யாழில் உள்ள ஊடக நிறுவனங்களிற்கும் அமைச்சர் குழு சென்றது.

இந்த பயணத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி பலாலியில் நடந்த பாதுகாப்பு தரப்புடனான சந்திப்பு. வடக்கு ஊடகவியாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டுமென பாதுகாப்பு தரப்பினரை வலியுறுத்துவதே சந்திப்பின் நோக்கம். கடந்த காலங்களில் பாதுகாப்புத் தரப்பினருக்கும் தமிழ் ஊடக நிறுவனங்களிற்குமான உறவு நல்ல நிலையில் இருக்கவில்லை. பாதுகாப்பு தரப்பினரை தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் அணுகும் விதத்தில் வடக்கு ஊடகவியலாளர்கள் அணுக முடியாத சூழ்நிலையும் அமைச்சரிடம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. ஊடகவியியலாளர்கள் தமது செய்றபாட்டை சுதந்திரமாகவும் நேர்மையாகவும் முன்னெடுக்க போதுமான ஒத்துழைப்பை வழங்குமாறு முப்படைகளின் தளபதிகளிடமும் அமைச்சர் கேட்டுக்கொண்டது முக்கியமான விடயம்.

குறிப்பிட வேண்டிய மிக முக்கியமான நிகழ்வு கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூவி. ஒன்றரை வருடத்தின் முன்னர் வரை ஊடகவியலாளர்களின் தலைக்கு மேல் கத்தி தொங்கிக் கொண்டிருந்த நிலையில், ஊடகவியலாளர் என்ற அடையாளத்தை வெளிப்படுத்தவே அச்சப்படும் சூழல் இருந்த நிலையில், கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவாக நினைவுத்தூவி அமைப்பதென்பது சாதாரண விடயமல்ல. வடக்கு ஊடகவியலாளர்கள் எதிர்கொண்ட இருண்ட காலமொன்றை நினைவுத்தூவி காலம் முழுக்க இனி நினைவுகூரும்.

'வாருங்கள் ஒன்றாக சுவாசிப்போம்' பயணம் பற்றிய எதிர்மறையான விமர்சனங்களும் கிளம்பாமலில்லை. வடக்கு ஊடகவியலாளர்களை சலுகைகளின் மூலம் அரசாங்கம் வலையில் வீழ்த்த முயல்வதாக ஒரு விமர்சனம் கிளம்பியுள்ளது. விமர்சனங்களிற்கு அப்பால் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் குடும்பங்களிற்கு ஒருதொகை நிதி கிடைத்ததென்பதே ஆறுதலான விடயம்தான். யாராலும் கவனிக்கப்படாமல் இருந்த குடும்பங்களிற்கு நீதியும், நிதியும் கிடைக்க வேண்டுமென்பது அவசியம். வடக்கின் ஊடக சுதந்திரம் உறுதி செய்யப்பட வேண்டும். அதனை செய்யப்போவதாக தற்போதைய அரசு கூறும்போது அதனை எதிர்க்காமல், அவகாசம் கொடுத்து பார்ப்பதே முறையானது.









# சிங்கத்தின் குகையில்

குழந்தைப் போராளி 6

சைனா கெய்ரெற்சி
தமிழில்: தேவா

ஆபிரிக்காவில் சிங்கம் மக்கள் மனதில் அச்சத்தை ஏற்படுத்தும் அதே நேரம், ஆச்சரியம் கலந்த மதிப்பையும் பெற்றுள்ளது. சிங்கம் பசியெடுத்தால் பயங்கரமானது. எனினும் அதன் துணிவு, பலம் போன்றவைக்காக ஆபிரிக்கர்கள் சிங்கத்தை மிகவும் நேசிப்பார்கள். யார் ஒரு சிங்கத்தை வெல்கின்றானோ அவன் தோற்கடிக்கப்பட்ட சிங்கத்தின் துணிவு, பலம், என்பவற்றின் ஒரு பகுதியைத் தனதாக்கிக் கொள்கின்றான். யார் தோற்கின்றானோ அவன் சிங்கத்திற்கு இரையாவதுடன் இருந்த இடமே தெரியாது போய்விடுகின்றான். ஆகவே சிங்கத்துடன் உறங்குவது என்பது இயலாத காரியம். ஏற்கனவே நான் ஆடுகளுடன் படுத்துக்கொள்ள முடிவு செய்துவிட்டேன்.

புளோரிடா மாமி சென்ற பின்பு எனது வாழ்க்கை ஒரு புதிய திருப்பத்தைச் சந்தித்தது. அவர் போனதுடன் அவருடனேயே இந்த வீட்டிலிருந்த நேசமும் பரிவும் போய்விட்டன. அவர் வீட்டில் செய்த வேலைகள் எல்லாம் என் தலைக்கு மேல் தான் சுமத்தப் பட்டன. எனது வயதோ மூன்றுதான். ஆபிரிக்காவிற்கும், டென்மார்க்கிற்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. அடிப்படைப் பார்வையே வித்தியாசம் தான். ஆபிரிக்காவில் இரண்டு, மூன்று வயது நிரம்பிய குழந்தைகள் கூட பலமான உடலமைப்பைக் கொண்டு இருப்பதனால் அவர்கள் வேலை செய்யத் தகுதியானவர்களாகக் கொள்ளப்படுகின்றனர். பொரும்பாலான ஆபிரிக்கக் குழந்தைகளின் நிலையும் இதே தான். நிச்சயமாக கிராமப்புறக் குழந்தைகளின் தலைவிதி இதுதான்.

படுக்கை விரிப்புக்களை நானே துவைத்த மாற்ற வேண்டும். கட்டிலில் மூத்திரம் பெய்வதை நிறுத்து' இது எனது பாட்டி. பழிவாங்கலாக நான் கட்டிலில் தான் மூத்திரம் விடுவேன். அவரைக் கோபப்படுத்துவதே எனது ஒரே இலட்சியம். பாட்டி என்னை அடிக்க அடிக்க பாட்டி மீதான வெறுப்பு எனக்கு அதிகரித்துக் கொண்டே சென்றது. மறு புறத்தில் அடி, உதைகளும் அதிகரித்துக் கொண்டே சென்றன.

ஒரு மாலைநேரம் பாட்டி என்னைப் பிடித்த உலுக்கினார். நான் எனது உடைகளை மூத்திரத்தால் நனைத்திருந்தேன். ஒரு வெறி பிடித்த மிருகம் போல பாட்டி என்னை நோக்கிப் பாய்ந்தார். என்னைக் காலிலும் கையிலும் பிடித்துத் தூக்கி சுழற்றித் தரையிலே வீசினார். 'மழுக்' என்று முறியும் சத்தம் எனக்குக் கேட்டது. எனது முழங்கையிலிருந்து கழுத்துவரை தீ பரவியது போல வலி பரவியது. எனது கையை தூக்க முயற்சித்தேன். ஆனால் கை மேழெலாது கீழே தொங்கிக் கிடந்தது. வெண்நிறமான எலும்பொன்று தோலைக்கிழித்துக் கொண்டு வெளியே தெரிந்தது. நான் அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டே நின்றேன். இரத்தம் வழிந்தோடத் தொடங்கியது. எனது இரத்தம்! உடனே எனது ஆடுகளின் ஞாபகம் தான் வந்தது. அவைகளை அறுக்கும் போது வழிந்தோடிய இரத்தம். பயத்தினால் அலறத் தொடங்கினேன். எனது கடைசிக்காலம் வந்துவிட்டது என நினைத்துக் கொண்டேன்.

ஆனால் பாட்டி எனக்கு மேலாகக் கத்தினார். நான் வாயை மூடிக்கொள்ள வேண்டுமாம். பாட்டி திரும்பவும் என் கையெலும்பை சரியாகப் பொருத்தினார். முறியும் போது வலித்தது போலே இப்போதும் வலித்தது. ஆயினும் எனது வாயிலிருந்து சின்னச் சத்தமும் எழவில்லை. போய்ப்படுத்துக் கொள்ளக் கட்டளை பிறந்தது. அவர் போய்விட்டார். நான் சத்தமின்றி அழுதேன். அப்போதே மெளனமாக அழுவதற்கு நான் கற்றுக் கொண்டேன்.

**அப்பாவின் மனைவி.**

கிழட்டுச் சூனியக்காரி எனது கையை முறித்தது ஒரு வியாழக்கிழமையாக இருக்க வேண்டும். சனிக்கிழமை அப்பா வருவதாக இருந்தது. அவர் தனது கால்நடைகளை பார்வையிடவும், வேலையாட்களுக்குச் சம்பளம் கொடுக்கவும் வந்திருந்தார். சனி காலையில் பாட்டி என்னிடம் 'நீ கட்டிலிலிருந்து விழுந்துதான் உன் கையை முறித்துக்கொண்டாய் என உன் அப்பாவிடம் சொல்ல வேண்டும், இல்லையென்றால் அப்பா நகரத்திற்குத் திரும்பியதும் நான் உன்னை உதைப்பது நிச்சயம்' என்றார்.

நான் தெருவுக்குச் சென்ற போது வண்டிவரும் சத்தம் கேட்டது. இது அப்பாவாக இருக்கலாம் என நான் நினைத்துக் கொண்டேன். என் கை வலித்துக்கொண்டே இருந்தது. நான் இதுவரை பார்த்தேயிராத ஒரு கார் தெருவில் வந்துகொண்டிருந்தது. நீல நிற சுஸீக்கி வாகனமது. வாகனம் நின்றதும் அதிலிருந்து உயரமான அழகிய பெண்ணொருத்தி கையில் வெள்ளைநிறப் பொதியொன்றுடன் கீழே இறங்கினார். பளீரென பால் வெள்ளை நிறத்தில் அவரது










இ.வித்திஆனந்தன்
(B.FA,PGDE, H.N.D.A)
சித்திர ஆசிரியர்
யா/ஆவரங்கால்
நடராஜ இராமலிங்க
வித்தியாலயம்




# ஓவியர் ரமணியும் புத்தக அட்டை ஓவியமும்

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுரையும் தெய்வத்துள் வைக்கப்படும்”என்றும் பொய்யா மொழிப் புலவரான வான்புகழ் கொண்ட வள்ளுவர் கூறுகின்றார்.அந்தவகையில் திறந்த புத்தகமாக 21ம் நூற்றாண்டில் வாழந்து கொண்டிருக்கும் ஓர் அளப்பெரிய யாழப்பாணத்துக் கலைஞர். வைத்தீஸ்வரன். சிவசுப்பிரமணியம்.


இவர் 1942.08.03ல் கலைகளின் பிறப்பிட மான அளவெட்டியில் பிறந்தார். இவர் ரமணி என்னும் புனைப்பெயருடன் தனக்கே உரித்தான தனிப்பாணியில் ஆதிக்கம் செலுத்தி வருகின்ற ஒருவர். பட்டை தீட்டப் பெற்ற வைரமாய் பிறப்பிலேயே திகழ்ந்த இவரின் கலை வாழ்க்கை யாழப்பாணத்தின் நவீன ஓவியத்தின் தந்தை என அன்பாக அழைக்கப்படும் மார்க் மாஸ்டரின் விடுமுறைக்கால ஓவியக் குழுவின் மூலம் ஆரம்பமாகியது.















மேலும் 1960 காலப்பகுதியில் இலங்கையில் புகழ்பெற்ற அரசினர் நுண்கலைக் கல்லுரி யில் தனது கலை ஆர்வத்தை மேலும் வளர்துக் கொண்டார்.அங்கு விரிவுரை யாளராகவும், அதிபராகவும் கடமை புரிந்த இலங்கையின் புகழ் பெற்ற ஓவியரான ஸ்ரான்லிஅபயசிங்க,மற்றும் ஓவியரான சல்டின் ஆகிய ஓவியர்களின் ஓவியப்பாணிச் செல்வாக்குக்கு உட்பட்ட ஓர் ஓவியராகத் தன்னை உணருகின்றார்.

அரசினர் நுண்கலைக் கல்லுரியில் கற்றுக் கொண்டிருந்த 1963 காலப்பகுதியில் பணிப் பாளரன விஜயவர்த்தனா,பிரதம ஆசிரியரான வி.கே.பி நாதன் என்போர் தொழில்பட்ட இலங்கையின் சிறந்த பத்திரிகைகளில் ஒன்றாகத் திகழ்ந்த ராதா என்னும் பத்திரி கையின் கதைகளுக்கு ஓவியம்வரையும் பணியை மிகவும் வேறுபட்ட பாணியில் மேற்கொண்டார்.

19671970 வரையான காலப்பகுதியில் தேசிய தொல்பொருள் திணைக்களத்தில் பணிபுரிந்ததன் மூலம் வேறுபட்ட அனுபவங் களை பெற்ற இவர் 1970 காலப்பகுதியில் இருந்து சித்திரக்கலை பாட ஆசிரியராக தனது கலைப்பணியை மேலும் விருத்தி ஆக்கினார். இவை மட்டுமன்றி 1975 காலப்பகுதியில் இலங்கை கல்வி வெளியீட்டுத் தணைக் களத்தில் விளக்கப்பட வரைவாளவாகத் தொழில்பட்டார்.அத்துடன் 19-90-2002 காலப் பகுதி வரை சித்திர பாட உதவிக்கல்விப் பணிப்பாளராக யாழ்ப்பாணக் கல்வி வலயம், வடமராட்சிக் கல்வி வலயம் ஆகியவற்றில் பணியாற் றியமை ஒரு விசேட விடயமாகும்.

SouthAsiainfo என்னும்நிறுவனத்தில் south Asia news collector இருந்த இயக்குனர் Walter Keller என்பவர் திரு ரமணி அவர்களின் சில புத்தக அட்டைப் படங்களை வெளிநாடுகளில் காட்சிப்படுத்தியமையும், அத்துடன் யாழப் பாணம் திருமறைக்கலாமன்றத்தின் இயக்குனர் கலாநிதி எம்.எஸ். சவேரி அவர்களும் கலிபோர்னியாவில் உள்ள pace university யில் திரு ரமணி அவர்களி னால் வரையப்பட்ட கிறிஸ்தவ வரலாற்றுப் படங்களை காட்சிப் படுத் தியமையும் ஒரு சிறப்பான விடயமாகும்.

இவரின் பிரதானமானதும் புகழைப் பெற்றுத்தந்ததுமான கலைத்தறையாகக் கருதப் படுவது புத்தக அட்டைப்லீடம் வரைதல் ஆக இருப்பினும் பல்ஆவறு சந்தர்பங்களில் சிற்பத் துறையிலும் மிளிரந்துள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது.அதற்கு சிறந்த எடுத்தக்காட்டாக

- 1974 தியாகி சிவகுமாரின் சிலை
- ஏஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் சிலை
- ஸ்கந்தா கல்லூரியில் சுப்பிரமணியத்தின் சிலை
- தங்கம்மா அப்பாக்குட்டியின் சிலை
- இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் கனகரட்ணம் அவர்களின் சிலை
- கெக்குவில் இராமகிருஸ்னா பாடசாலை அதிபரின் சிலை
- யாழப்பாண குமாரசுவாமி மண்ட பத்தின் முன்னால் உள்ள ஆறுமுக நாவலர் சிலை
- தீருவில் எனும் இடத்தில் உள்ள ஏழு மனிதர்கள் கொண்ட சிற்பம்
- வடமராட்சியில் உள்ள கல்விமான் சூரன் என்பவரின் சிற்பம்
- ஊரனி வைத்திய சாலை நிறுவுனர் சிலை

போன்று சிறப்புப் பெற்ற கைவண்ணங்கள் மதிப்பிட முடியாத பெறுமதி கொண்டவை.

நீங்கள் எழுதியவை...



இவை மட்டுமன்றி இவருடை நிபுனத்துவத்தினை வெளிப்படுத்தும் விசேட துறையாகக் கருதப்படும் புத்தக அட்டை ஓவியம் ஏறக்குறைய 300 வரை காணப்படுவது விசேடமாகும்.தன்னுடைய இத்து றைசார் வளர்ச்சியில் இந்தியாவின் புத்தக அட்டை ஓவியர்களான வீரசந்தானம்,மருது,மற்றும் இலங்கையின் திஸநாயக்கா போன்றவர்கள் தனது முன்மாதிரிகள் எனக் குறிப் பிடுகின்றார்.

இவருடைய புத்தக அட்டை ஆக்கங்களை கலை உலகத்தில் ஏற்பதற்குக் காரணம் நவீனம் கலந்த சிந்தனைத்தூண்டலை ஏற்படுத்துவதாக ஓவி யங்கள் இருத்தல் மட்டு மன்றி நவீன எழுத்து முறைப்பயன்பாடும் காணப் படுவதே ஆகும்.

விசேட வெறியாகக் கருதப்படக்கூடியது தேசிய பாடத்திட்ட மறு சீரமைப்பு 2016ம் ஆண்டு மாற்றி அமைக்கப்பட்ட போது யாழ் பாணத்து ஓவியர்களில் குறிப்பாக ஓவியர் மாற்கு, ஓவியர் ரமணி, ஓவியர் சிரித்திரன் சுந்தர், ஓவியர் கனகசபாபதி போன்ற யாழ்ப் பாணத்து ஓவியர்கள் இணைத்துக்கொள்ளப் பட்டமை ஆகும். எனவே தொடர்ந்து வரும் காலங்களிலும் இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமாயின் ஏனைய யாழ்ப் பாணத்து ஓவியர்களை இணைப்பது மட்டு மன்றி எமது பிரதேச மாணவர்களின் கற்றற் திறன் மேம்படும் என்பது ஆசிரியராகிய எனதும் ஏனைய கலைத்துறை சார்ந்தவர் களினதும் பேரவா.





களுவாஞ்சிக்குடி ஸ்ரீரீ வீரபத்திரர் ஆலய சங்காபிசேக நிகழ்வு கடந்த வாரம் நடந்தது.

## அதுக்கு சரிவராத சமந்தா!

சமந்தா கவர்ச்சி விடயத்தில் குறை வைப்பதில்லை. என்றாலும், அவரை கவர்ச்சி நாயகியாக யாரும் நினைப்பதில்லை. அப்படியொரு பெயரை பெறவுமில்லை. இது சமந்தாவிற்கு இலேசான வருத்தத்தை உண்டாக்கியுள்ளதாம். இதற்குள் இன்னொரு கவர்ச்சி செய்தியுமுண்டு. இரண்டு வருடங்களின் முன்னர் தெலுங்கு படமொன்றில் சிறிய துண்டொன்றை கட்டிக் கொண்டு குளியல் காட்சியில் நடித்திருந்தார். ஆனால் அது படத்தில் இடம்பெறவில்லை. இணையத்தில் உலாவுகிறது. தெலுங்கில் நிதின் ஜோடியாக 'எஏ' படத்தில் நடிக்கிறார். இதிலும் ஒரு குளியல்காட்சியாம். ஸ்டார் ஹோட்டலொன்றின் குளியலறையில் படப்பிடிப்பு நடத்த திட்டமிடப்பட்டிருந்ததாம். ஆனால் அங்கு நடிக்க சமந்தா மறுத்துவிட்டாராம். பின்னர் குளியலறை செட் போடப்பட்டுத்தான் படப்பிடிப்பு நடந்ததாம்.



## 'அமீர்'மணி

நீண்டகாலத்தின் பின்னர் கவுண்டமணி கலாய்க்கும் படம் 'எனக்கு வேறு எங்கும் கிளைகள் கிடையாது'. எத்தனை காலமானாலும் கவுண்டமணிக்கு ரசிகர்கள் இருக்கத்தான் செய்வார்கள். அப்படியொரு கலக்கல் நகைச்சுவை அவரது. பீகே படத்தில் அமீர்கான் நடித்த வேடத்திலும் கலக்கவுள்ளாராம். கேரவன் கிருஸ்ணன் என்ற வேடத்தில் பகுத்தறிவு பேசுபவராக நடிக்கிறாராம். இந்தப்படம் ரசிகர்களிற்கு நிச்சயம் படிக்கும் என படக்குழு நம்புகிறது.



## சக்ஸஸ் சேதுபதி

பீட்சா, நடுவில கொஞ்சம் பக்கத்தை காணோம், சூது கவ்வும், இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா என வரிசையாக நான்கு ஹிட் கொடுத்தவர் விஜய் சேதுபதி. பின்னர் சில படங்கள் சறுக்கின. சுதாகரித்துக் கொண்டு நானும் ரௌடிதான் ஹிட்டடித்தார். பிறகு சேதுபதி, காதலும் கடந்து போகும் என ஹிட் கொடுத்துள்ளார். அடுத்தடுத்து ஹிட் அடித்துவரும் விஜய் சேதுபதியின் படங்கள் இந்த வருடத்தில் ஏழு வரவுள்ளனவாம். அதிக படங்கள், அத்தனையும் ஹிட் எப்படியப்பா இது என எல்லா ஹீரோக்களும் வாய் பிளக்கிறார்களாம்.



## ஸ்டைல் ராஜா

கபாலி படத்திலும் வழக்கம் போல ரஜினியின் ஸ்டைல் பட்டையை கிளப்புகிறதாம். ரஜினிக்கென ரசிகர்கள் மத்தியில் உள்ள ஸ்டைல் எதிர்பார்ப்பிற்கு கபாலி தீனி போட வேண்டுமென்பதில் இயக்குனர் ரஞ்சித் அதிக அக்கறை எடுத்துள்ளாராம். ரஜினியின் அறிமுகக்காட்சிக்கே அதிகம் மினைக்கெட்டார்களாம். முடியை கோதிவிட்டபடி, ஸ்டைலாக கூலிங்கிளாசை மாட்டிக் கொண்டு ரஜினி வரும் அந்தக்காட்சிக்கு நறைய கமராக்கள் பயன்படுத்தப்பட்டு படப்பிடிப்பு நடந்துள்ளது.

## அடம்பிடிக்கும் கீர்த்தி

வந்த வேகத்திலேயே அடுத்தடுத்த பெரிய ஹீரோக்களின் படங்களில் ஒப்பந்தமாகி புயலைக் கிளப்பியவர் கீர்த்தி சுரேஸ். தனுஸ், விசாலுடன் நடிக்க வந்த வாய்ப்புக்கள் பின்னர் இல்லாமல் போனது. அதுபோல தெலுங்கில் ராம் சரண், மகேஸ்பாபு படங்களிலும் நடிப்பார் என கூறப்பட்டு, இறுதி நேரங்களில் கைநழுவியது. இப்படி பெரிய வாய்ப்புக்கள் கீர்த்தியை விட்டு நழுவிச் செல்ல காரணம், ஓவர் கவர்ச்சியாக நடிக்க மாட்டேன் என்ற அவரது பிடிவாதமாம். தெலுங்குப்பக்கம் செல்வதென்றால் கவர்ச்சிதான் வழியென கீர்த்திக்கு நெருக்கமானவர்கள் அறிவுரை கூறியுள்ளனராம்.

## காத்திருக்கும் விசாகா

'கண்ணா லட்டு தின்ன ஆசையா' படக்குழுவின் தயாரிப்பில் வெளியாகியுள்ளது 'வாலிபராஜா'. சந்தானம், விசாகாசிங் நடித்துள்ளனர். இந்தப்படத்தில் இரண்டாவது நாயகியாக ஒருவரை தேடியபோது தனது நண்பியும், நடிகையுமான நுஸ்ரத்தை பரிந்துரைத்துள்ளார் விசாகசிங். அதனையடுத்து அவர் நடிக்க வைக்கப்பட்டுள்ளார். இந்தப்படத்தின் பின்னர் தமிழில் நிச்சயம் நல்ல வாய்ப்புக்கள் வருமென எதிர்பார்த்திருக்கிறார் விசாகாசிங்.

## நிபந்தனை நித்யா

நித்தியா மேனனை நடிக்க வைப்பதென்றால் சாதாரண விடமல்ல. கதை பிடித்தால்த்தான் நடிப்பார். பிடிக்காவிட்டால் எந்தப்பெரிய இயக்குனர் என்றாலும் 'நோ'தான் பதில். ஏ.ஆர். முருகதாஸிற்கும் இப்பொழுது அதுதான் நடிக்கிறது. தமிழ், தெலுங்கில் அவர் இயக்கும் புதிய படத்தில் நடிக்க மறுத்துள்ளார் நித்யா மேனன். மகேஸ்பாபு நாயகன். இந்திக்கும் பொருத்தமான முகமாக இருக்க வேண்டுமென பிரியங்கா சோப்ராவின் தங்கை பிரணிதா சோப்ராவை தேர்வு செய்துள்ளனர். நுடிக்க தெரிந்த இன்னொரு நாயகி தேவையென நித்யா மேனனை அணுகியுள்ளனர். கதையை கேட்டுவிட்டு, கதையில் தனக்கு முக்கியமில்லையென கூறி நிராகரித்துள்ளார்.

## ஹரிப்பிரியா ஏளு ரம்யா


'கனகவேல் காக்க', 'வல்லக்கோட்டை' படங்களில் நடித்த ஹரிப்பிரியா 'அதர்வணம்' என்ற படத்தில் தற்போது நடித்து வருகிறார். கன்னடத்திலும் சில படங்களில் நடித்துள்ளார். குத்து ரம்யா என சில காலங்களின் முன் தமிழ்சினிமாவில் தோன்றிய நடிகை அரசியலில் குதித்தார். அதனால் படவாய்ப்புக்களை கைவிட்டார். 'நீர்டோஸ்' என்ற படத்தில் ஒப்பந்தமாகிய பின்னர் விலகினார். அவருக்காக ஹரிப்பிரியாவை ஒப்பந்தம் செய்தனர். தற்போது ரம்யா அரசியலில் தீவிரம் காட்டாததால் படப்பக்கம் திரும்பியுள்ளார். அவர் சில படங்களில் ஒப்பந்தமாகியபோதும், இறுதியில் அந்த வாய்ப்புக்கள் ஹரிப்பிரியாவிற்கு சென்றுவிட்டதாம். ரும்யாவும், ஹரிப்பிரியாவும் விரைவில் பகிரங்கமாக மோதினாலும் ஆச்சரியமில்லையென்கிறது கன்னட வட்டாரங்கள்.

## டூரிங் டாக்கீஸ்



# வெய்யிலோ வெய்யில்







**சி.யமுனானந்தா**
வைத்தியர்

இந்த வெப்பகாலநிலையில் மனித உடல் அதிக நீரிழப்பை சந்திக்கும். வெய்யிலுக்கான பாதுகாப்பின்றி வெளியில் உலாவுதல், வெய்யிலில் விளையாடுதல் போன்ற காரணங்களால் நீரிழப்பேற்படும். பெரியவர்கள் தினமும் 3 லீற்றர் நீருக்கும் அதிகமாக அருந்த வேண்டும். நீராகார உணவுகளையும், பழங்களையும் உட்கொள்ள வேண்டும். மதுப்பாவனையை கண்டிப்பாக குறைக்க வேண்டும். அதிகவெப்பத்தால் கிருமித் தொற்று ஏற்படும். தற்போது தோல்நோய்கள் அதிகமாக பரவுகிறது. தூசிகளால் ஏற்படும் ஆஸ்மா தாக்கமும் அதிகரித்துள்ளது.

நீரிழப்பினால் உடலுக்கு தேவையான நீர் சரிவரக்கிடைக்காமல் சிறுநீரகத்தில் கற்கள் உருவாகலாம். வெப்பகாலமென்றாலே வைரஸ் தொற்றும் அதிகமிருக்கும். வைரஸ் நோய்கள், சின்னம்மை தாக்கலாம். ஒருநாளில் இரண்டு, மூன்று தடவை குளித்துக் கொள்ளலாம். குழந்தைகளை மிகக்கவனமாக பராமரிக்க வேண்டும்.

கடுமையான உடற்பயிற்சிகள் செய்வதை நிறுத்திக் கொள்ளுங்கள். வெப்பத்தால் செல்லப்பிராணிகளும் பாதிக்கப்படுகின்றன. அவற்றையும் பாதுகாக்க வேண்டும்.

சுட்டு
chuddu.deepam@gmail.com

பூமிக்கு கீழே யாரோ தீமூட்டி விட்டார்களோ என்றுதான் யோசிக்க வைக்கிறது. உடலில் தீப்பிடித்ததை போல எல்லோரும் ஓடித்திரிகிறார்கள். அப்படியொரு வெப்பம். திடீரென ஏனிந்த வெப்பம்? பூமிக்கு என்ன ஆயிற்று?

பொதுவாகவே கடந்த சில வருடங்களாக உலக வெப்பநிலை உயர்ந்து கொண்டுதான் வருகிறது. ‘திடீர் திடீருன்னு உடையுதாம்ஞ் திடீர் திடீருன்னு சாயுதாம்’ பாணியில் திடீரென பெருமழைஞ் திடீரென வரட்சியென உலக காலநிலையே தடம்புரண்டு போய் விட்டது.

மூன்று மாதங்களின் முன்னர் பேய்மழை இலங்கையையே உலுப்பியது. அடித்துப்பெய்த மழையால் கழுத்துவரை வெள்ளம் வந்து மொத்த இலங்கையும் திண்டாடியது. வெள்ளம் வடியவே ஒருமாதமானது. நீர்த்தேக்கங்களில் போதிய நீர்நிரம்பியது. இம்முறை இலங்கையில் நீர்ப்பற்றாக்குறை வராதென்ற நம்பிக்கை பரவலாக இருந்தது. ஆனால் மூன்று மாதங்களிற்குள் அனைத்தும் த்லைகீழாகி அனலாக கொதிக்க ஆரம்பித்து விட்டது.

வடக்கிலிருந்த நீர்நிலைகள் கணிசமாக காணாமல் போய் விட்டன. கால்நடைகள் நீர்தேடி அலைந்து கொண்டிருக்கின்றன. கணிசமான இடங்களில் நீர்ப்பற்றாக் குறை ஏற்பட்டு விட்டது. இதற்கெல்லாம் என்ன காரணம்?

இலங்கைக்கு மேலாக சூரியன் உச்சம் கொடுத்திருப்பதால் இந்த தகிப்பு என்கிறார்கள். ஆனால் இது உடனடி காரணம் மட்டுமே. இதற்கு பின்னால் உள்ள அடிப்படையான ஒரே காரணம்மனிதர்களின் பொறுப்பற்றதனம். அதனால் ஏற்பட்ட எல்நினோ காலநிலை மாற்றம்.

உலகம் எதிர்கொள்ளும் மிகப் பெரிய அபாயமாக இது மாறி விட்டது. அதிகரித்த வெப்ப வெளியீடு, வாயு வெளியேற்றம், காடழிப்பு என பல்வேறு காரணங்களால் சூழல் சமநிலை தடுமாறிப் போய்விட்டது. விளைவு உலகம் விலைகொடுக்க ஆரம்பித்து விட்டது. இதனை எப்படி சமாளிப்பதென இப்பொழுது உலகத்தலைவர்கள் தலையை பிய்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

## உச்சந்தலை கிறுகிறு

கடந்த பத்துநாட்களாக போறணைக்குள் போட்டதை போல இலங்கையர்கள் உணர்கிறார்கள். சாதாரணமாக வெப்பநிலை 36 பாகை செல்சியசை கடந்தது. பகல், இரவு என்றில்லாமல் வெப்பம் வாட்டியது.

நண்பகல் 12 தொடக்கம் 3 மணிவரை வெய்யில் அகோர முகம் காட்டியது. பாடசாலை மாணவர்களின் விளையாட்டு நிகழ்வுகள் பல ஒத்திவைக்கப்பட்டன.

காலையிலேயே வியர்வை வழிய அலுவலகம் ஓட வேண்டியுள்ளதாக எல்லோரும் முணுமுணுக்கிறார்கள். பஸ்நெரிசல், அலுவலக நெருக்கடி என எல்லாம் சேர்ந்து வெப்பகாலம் நரகமாக மாறிவிட்டதென்கிறார்கள் அரசஊழியர்கள். அதிகரித்த வெப்பம் ஐஸ்கிறீம், இளநீர் வியாபாரத்தை அதிகரித்து விட்டதென் கிறார்கள். யாழ்ப்பாண நகரத்தில் ஆரியகுளம், பொதுநூலகத்தடியில் இளநீர் விற்பவர்களை சுற்றி எப்பொழுதும் கூட்டம் நிற்கிறது. கிராமங்களிற்குள் செல்லும் ஐஸ்கிறீம் வாகனங்கள் காலியாகத் தான் திரும்புகின்றனவாம்.


நகர வாழ்க்கைதான் வெப்பத்தால் நரக வாழ்க்கையாகியுள்ளது. வீட்டுக்கொரு மரம் இருந்தாலே வெப்பகாலத்தை ஓரளவு சமாளித்து கொள்ளலாமென்பதுடன், புவி வெப்பமடைவதையும் ஓரளவு தவிர்த்து கொள்ளலாம்.

அடுத்தடுத்த வாரம் இன்னும் அச்சுறுத்தலாக இருக்கப் போகிறது. அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அவசியம். குறிப்பாக சிறிய குழந்தைகளை வைத்திருப்பவர்கள்தான் அதிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எப்பொழுதும் மின்விசிறியை மட்டுமே நம்பியிராதீர்கள். பகலில் அடிக்கடி நிழலான இடங்களிற்கு குழந்தையை கொண்டுசெல்லுங்கள்.

உடல்வெப்பத்தை அதிகரிக்க விடாமல் பார்த்து கொள்வது எல்லோருக்கும் மிக முக்கியம். அடிக்கடி குளிர்ந்த நீரை பருகி, குளிர்ந்த நீரால் உடலை கழுவிக் கொள்ள வேண்டும். அதிக சூட்டை ஏற்படுத்தும் உணவுகளையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அண்மைக்காலமாக காலநிலை தாறுமாறாக மாறிக் கொண்டிருப்பதற்கு நாமெல்லோரும்தான் பொறுப்பாளிகள். நமது பொறுப்பற்றதனத்தை புவி இப்படியான சமிக்ஞைகளின் மூலம்தான் உணர்த்துகிறது. அதனை புரிந்து கொள்ள மறுத்தால் பேரழிவே எஞ்சும்.

**லோகேஸ்வரன்**
சிரேஸ்ட வளிமண்டலவியல் அதிகாரி



வடகீழ் பருவப்பெயர்ச்சிக்காற்று வலுவிழந்து போகும் காலமிது. இடைப்பருவப் பெயர்ச்சிக்காற்றுக்காலம் இது. இதனால் வானில் காற்றமுத்த நிலையேற்படும். பிற்பகல் அல்லது இரவில் ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பொழியும். வடக்கில் பல இடங்களிலும் மழைபெய்துள்ளது.

மழைபெய்தாலும் பெய்யாவிட்டாலும் வெப்பநிலை உயர்வாகத்தான் இருக்கும். மதியம் 12 மணியை விட பிற்பகல் 2 மணியில் வெப்பநிலை அதிகமாக காணப்படும்.

சூரியக்கதிர்வீச்சை வெப்பம் என்றும், புவியிலிருந்து எழும் வெப்பத்தை வெப்பநிலையென்றும் சொல்வோம். நேரடி வெப்பத்தை போலல்லாமல், புவியிலிருந்து படிப்படியாகவே வெப்பம் எழுவதால் 2 மணிக்கு வெப்பம் அதிகமாக இருக்கும்.

வரும் ஏப்ரல் 14,15ம் திகதிகளில் யாழ்ப்பாணத்து மேலாக சூரியன் உச்சம் கொடுக்கவிருப்பதால் இன்னும் கடும் வெப்பத்தை எதிர்கொள்ள வேண்டும். ஆனால் பிற்பகல், இரவுகளில் பெய்யும் மழையை பொறுத்து வெப்பநிலை மாறுபடலாம். ஏப்ரல் மாதத்தின் பின்னர் வெப்பநிலை படிப்படியாக குறைவடைந்துவிடும்.



# சோதிடம் தரும் வாரபலன்கள்

## 03.04.2016 முதல் 09.04.2016 வரை

சோதிட ஆலோசகர்
சி.இராசநாயகம்
0776147392



### மேடராசி

***சாதகமானவை:*** சுபபலன்கள் இருத்தல், சொத்துக்கள், செல்வம் சேமிப்பு இருத்தல், பெண்களினால் நன்மை, சுகம் கிடைத்தல், திரவியலாபம், கருமங்களில் வெற்றி கிடைத்தல், நல்ல அதிகாரம் கொண்டு செயற்படுதல், பணவரவுகள் அமைதல், வெளிநாடு செல்லும் பயணக்கருமங்கள் அனுகூலமாய் அமைதல், போஜனசுகம், சுபநிகழ்வுகளில் பங்கேற்றல், புதிய முயற்சிக்கும் பலன் செய்யும்.

***பாதகமானவை:*** தேகஆரோக்கியம் பாதிப்புப் பெறுதல், சில அவமதிப்புக்கள் காணப்படுதல், பிரயாண அலைச்சல், மனதில் இடையிடையே துக்கம், பணவிரயம் அமைதல், சிறுசிறு நஷ்டம் அமைதல், சிலரது சூழ்ச்சிகளில் சிக்குதல், சில சந்தர்ப்பங்களில் விபத்துக் காட்டுதல், வழக்குகள் தோல்வியில் முடிதல், திருட்டுப்போகும் நிலையும் உண்டாதல்.

***அதிர்ஸ்ட நாட்கள்: 05,06,08 திகதிகள்.***

### இடபராசி

***சாதகமானவை:*** சிலரது ஆலோசனைகள் வழிகாட்டல்கள் இருக்கப் பெறுதல், தேகசுகம் நன்றாயமைதல், செய்தொழிலில் சந்தோசம், உற்சாகமாய் செயற்படுதல், பொருள் லாபம், குடும்பசுகம், போஜனசுகம், அசையும் அசையா சொத்துக்கள் சேரும் நிலை, தூரத்துச் செய்தி அறிதல், செய்கருமங்கள் வெற்றி நிலை பெறுதல், இனசனசுற்றம் வருகை என்பன தரும்.

***பாதகமானவை:*** கெட்ட வார்த்தைகளால் நிந்தை பெறுதல், இனசனபந்து பகை இருத்தல், சிறை செல்லும் நிலை போன்ற செயல்கள் அமைதல், செய்கருமங்கள் தாமத நிலை பெறுதல், சிறுசிறு நஷ்டநிலை, மற்றும் வீண் செலவுகளும் தரும் பலன் அமையும்.

***அதிர்ஸ்ட நாட்கள்: 04,06,09 திகதிகள்.***

### மிதுனராசி

***சாதகமானவை:*** குடும்பசுகம், இனசன பந்து சுகம் நன்றாயமைதல், நல்ல இலட்சுமிகர நிலை, நல்ல உற்சாகமாய் தொழிற்படுதல், சில கருமங்களில் வெற்றி கிட்டுதல், மனச் சந்தோச நிலை, தெய்வ தரிசனம், குருமார் சந்திப்பு, நல்ல ஆடை அணிகலன்கள் அமைதல், அதிகாரிகள் சந்திப்பும் இருக்கப் பெறுதல்,

***பாதகமானவை:*** மனதில் சிறு கவலை, சிறுசிறு சச்சரவுகள் காணும் நிலை, இடையில் நோய், பிணி வந்து குணமாதல், பிரயாணங்களில் எச்சரிக்கை நிலை, சில கருமங்கள் கைகூடுவதில் தாமத நிலை தருதல், சில அவமதிப்புக்கு உட்படுதல், பொருள் விரயமும் காட்டும்.

***அதிர்ஸ்ட நாட்கள்: 05,06,07 திகதிகள்.***

### கடகராசி

***சாதகமானவை:*** சுபநிலை, செல்வம் சேமிப்பு நிலை அமைதல், பெண்களால் ஆதரவு பெறுதல், பணவரவுகள் அமைதல், நல்ல சந்தோசம், இலாபகரமான நிலை, போஜனசுகம் உண்டாதல், தான,தர்மம் செய்யும் நிலை, சுகபோகம் ஏற்படுதல், தன தானிய விருத்தி, கல்விச் சிறப்பு, மன நிம்மதி, இறுதியில் உடல் நலமும் நன்றாய் காணப்படுதல், அதிகாரிகள் சந்திப்பும், தூரச் செய்தியும் கிடைக்கலாம்.

***பாதகமானவை:*** உடல் நலம் பாதிப்பு பெறுதல், சிறுசிறு நஸ்டம் இடையில் அமைதல், பிணக்குகளால் பொருள் விரயம், பயணங்களில் எச்சரிக்கை நிலை, வயிற்றில் வியாதிகள் தோன்றி மறைதல், வகிக்கும் நிலைகளில் சில மாற்றங்கள், வழக்குகள், பிணக்குகள் பாதகமான முடிவு தரும்.

***அதிர்ஸ்ட நாட்கள்:04,07,08 திகதிகள்.***

### சிம்மராசி

***சாதகமானவை:*** தேகசுகம் நல்ல நிலை காணுதல், நல்ல புத்திமதிகள் பெறல், தெய்வ வழிபாடுகள் அமைதல், மனதில் சந்தோச நிலை உருவாதல், செய்தொழில் லாபகரமான நிலை காணுதல், கணவன், மனைவி உறவு வலுவாய் அமைதல், தன, தானிய விருத்தி உண்டாதல், சுபநிகழ்வுகளில் பங்குபற்றுதல், சுபச் செய்தி அறிதல், நல்ல உணவு கிடைத்தல், இனசனபந்து தொடர்பும் உண்டு..

***பாதகமானவை:*** அவதூறுகள் கேட்டல், சிறுசிறு பகைகள் உருவாதல், இடையில் நோயால் கஸ்டமுறுதல், பிரயாணங்களில் பயமுண்டாதல், சில கருமங்கள் தாமத நிலை பெறுதல், மறதிக்குணம் இருத்தல், இடமாற்றம், பதவி மாற்றங்களினால் பாதிப்பு நிலை பெறுதல், எதிர்பார்த்த விடயம் தோல்வியில் முடிதல், நோய், பிணி துன்பத்தையும் தரும்.

***அதிர்ஸ்ட நாட்கள்:.03,08,09 திகதிகள்.***

### கன்னிராசி

***சாதகமானவை:*** இனசனபந்து சுகம், குடும்ப சுகம், பொருன் லாபம், கருமங்களில் வெற்றி கிட்டுதல், நல்ல சீர் சிறப்பு, ஐஸ்வரியநிலை, பொருளாதார திருப்தி நிலை, கருமங்கள் அனுகூலமாய் முடிவடைதல், பெண்கள் சிலரால் சுகம் கிடைத்தல், கல்விச் சிறப்பு, தொழில் சிறப்பு, வழக்குகள் சாதகமான முடிவினைத் தருதல், என்பன நடந்தேறும்.

***பாதகமானவை:*** மனத்துயரம் கொள்ளுதல், சிறுசிறு சண்டை போன்ற நிலை அமைதல், இடையில் நோய் வந்து குணம் பெறுதல், மனதில் அச்ச உணர்வு தோன்றி மறைதல், வீட்டில் பெண்களுக்கு நோய், பிணி காட்டுதல், பிரயாணங்களில் எச்சரிக்கை அவசியம், பொருள் விரயம் மற்றும் துர்ப்பாக்கிய நிலையும் தோற்றுவிக்கும்.

***அதிர்ஸ்ட நாட்கள்: 05,06,07 திகதிகள்.***

### துலாம்ராசி

***சாதகமானவை:*** செல்வம், சேமிப்பு நிலை, அசையும், அசையாத சொத்துக்கள் சேர்தல், பெண்கள் ஆதரவு, உதவி, மனச்சந்தோசம் என்பவை அமைதல், பொன், பொருள் வரவு காணுதல், வதிவிடம் விட்டு வேறு இடம் தங்கும் நிலை, செய்தொழில் மேன்மை தருதல், தெய்வ தரிசனம், பெரியோர் சந்திப்பு, தொலைதூர இடத்திலிருந்து செய்தி கிடைத்தல், என்பன உண்டாகும்.

***பாதகமானவை:*** தேகசுகம் பாதிப்பு, சிறுசிறு நஷ்டநிலை காணப்படுதல், ஒரு சிலரில் நம்பிக்கை வைக்காத நிலை காணப்படுதல், கருமங்களில் சில தாமத நிலை காணப்படுதல், சிறுசிறு சச்சரவு பிணக்கு நிலை காணப்படுதல், விபத்து, ஆபத்து குறித்த எச்சரிக்கை நிலை காணப்படுதல், பணவிரயம், மனத்துயரம் அமைதல், உணவில் வெறுப்புக் காட்டும் நிலை என்பனவும் காணப்படுதல்,

***அதிர்ஸ்ட நாட்கள்: 04,06,08, திகதிகள்.***

### விருச்சிகராசி

***சாதகமானவை:*** தேகசுகம் பேணுதல், பலரது உபதேசங்கள் கேட்டல், தெய்வ தரிசனங்கள் பெறுதல்,செய்தொழில் லாப நிலை பெறுதல், மனதில் உற்சாகம், சந்தோசம் கொண்டு நடத்தல், கௌரவம் கிடைத்தல், பணப்புழக்கம் அதிகரித்தல், சுபச் செய்தி அறிதல், இனசன சுற்றம் வருகை அமைதல், அரச அதிகாரிகள் சந்திப்பு வருகை அமைதல், பிறர் உதவி தேவைப்படும் சிலை என்பனவும் அமையும்.

***பாதகமானவை:*** கெட்டவார்த்தைகள் கேட்டல், இருக்கும் நிலைகளில் சில மாற்றங்கள் ஏற்படுதல், இருக்கும் நிலைகளில் சில மாற்றம் ஏற்படுதல், புத்தி மந்த நிலை காணப்படுதல், நம்பிக்கை வைக்காமல் செயற்படும் நிலை காணப்படுதல், இடையில் காரியம் தடங்கல் நிலை அடைதல், செலவீனம் இருத்தல், விபத்துக் குறித்து கவனம் வேண்டும் நிலை, வழக்கு விவகாரம் தோல்வியும் தரும்.

***அதிர்ஸ்ட நாட்கள்: 05,06,07 திகதிகள்.***

### தனுசுராசி

***சாதகமானவை:*** குடும்ப சுகம், இனசனபந்து சுகம், திரவிலாபம், இனசன பந்துக்கள் ஒன்று கூடுதல், ஆடை, ஆபரணம் சொத்துச் சேருதல், அதிகாரமாய் செயற்படுதல்,கல்விச்சிறப்பு,வழக்குவிவகாரம் வெற்றியில் முடிதல், சுபநிகழ்வுகளில் பங்கேற்றல், பெரியோர் சந்திப்பு, பெண்களது தொடர்பு காணப்படுதல், குருமார் சந்திப்பும் இருக்கச் செய்யும்.

***பாதகமானவை:*** மனத்துயர் பெறுதல், சச்சரவு பிணக்குகள் ஏற்படுதல், நஷ்டநிலை காணப்படுதல், எதிரியால் தொல்லை, நம்பிக்கை கொள்ளாத நிலை, கௌரவம் பாதிப்படைதல், பணவிரயம் உண்டாதல், கடன் தொல்லை, அபத்து ஏதும் நிகழ்தல், திருடர் பயங்களுக்கு ஆளாதல், உணவை வெறுக்கும் நிலை உண்டாதல், என்பனவும் காட்டும்.

***அதிர்ஸ்ட நாட்கள்: 03,07,09 திகதிகள்.***

### மகரராசி

***சாதகமானவை:*** அசையும் அசையா சொத்து சுகம் கிடைத்தல், கருமங்கள் சுப நிலை பெறுதல், லாபகரமாய் செயல்களை முன்னெடுத்தல், மனதில் உற்சாகம், சந்தோச நிலைகள் காணப்படுதல், விவேகமாய் செயற்படுதல், பணவருவாய் அமைதல், தேகநலம் படிப்படியாய் நல்ல நிலை அடைதல், ஊக்கமுடன் செயற்படுதல், தொலைவிலிருந்து நல்ல செய்தி கிட்டுதல், போன்ற பலன்கள் அமையப்பெறும்.

***பாதகமானவை:*** தேகசுகம் குறைவாய் இருத்தல், வாக்குவாதப்படல், நஷ்டநிலை, சில நம்பிக்கையில்லாத நிலை உருவாதல், கருமங்களில் இடையிடையே சில தடங்கல் நிலை பெறுதல், வீண் செலவுகள், வாக்குவாதம், வழக்கு விவகாரம் தோல்வி நிலை,பிறர் உதவியை நாடும் நிலையும் தரும்.

***அதிர்ஸ்ட நாட்கள்: 04,06,08 திகதிகள்.***

### கும்பராசி

***சாதகமானவை:*** தேகநலன் திருப்தி நிலை, நல்ல புத்திமதிகள் கேட்டல், தெய்வ வழிபாடுகள் இருத்தல், கணவன், மனைவி உறவு நல்ல நிலை, செல்வம் செழிப்பான நிலை, பெய்கள் ஆதரவு நன்மை உதவி அமைதல், செய்தொழில் விருத்தி நிலை பெறுதல், பல வழிகளிலும் நன்மை கிடைத்து வருதல், மன அமைதி போஜனசுகம், நூதனமான பொருள் சேர்தல், நல்ல சரித்திரமான செய்திகளை அறிதல் என்பனவும் உண்டு.

***பாதகமானவை:*** அவதூறுப்படல், வகிக்கும் நிலைகளுக்கு சிறு பாதிப்பு ஏற்படுதல், மனக்கவலை, வாக்குவாத நிலை, மனப்பயம் கொள்ளுதல், செலவுகள் அமைதல், மதிப்புக் குறைதல், வியாபார மோதல்கள் வெளிப்படுதல், வீண் சிரமம், அலைச்சல் இடையிடையே அமைதல் போன்ற பலன் செய்யும்.

***.அதிர்ஸ்ட நாட்கள்: 04,06,09 திகதிகள்.***

### மீனராசி

***சாதகமானவை:*** குடும்பசுகம், இனசன பந்து சுகம், கணவன், மனைவி உறவு நலமாய் அமைதல், நற்பண்புகளை வெளிப்படுத்துதல் இலட்சுமிகரமான நிலையை நோக்கிப் பயணித்தல், சுபமங்கள செய்தி கிட்டுதல், இனசனசுற்றம் வருகை, நல்ல நிகழ்வுகளில் பங்கேற்றல், அதிகாரிகள் சந்திப்பு, குருமார் சந்திப்பு, தெய்வ வழிபாடுகளில் ஈடுபடுதல், நல்ல ஆடை, அணிகலன்கள் அமைதல் என்பவை காட்டும்.

***பாதகமானவை:*** மனச்சஞ்சலம் பெறுதல், சச்சரவு நிலை காணப்படுதல், நோய், பிணி அமைதல், கஸ்டநிலை தொடரும், பொருள் விரயம், எதிரிகள் தொல்லை, முயற்சிகளில் சில தடங்கல் நிலை, பதவி நிலைகளில் இடைஞ்சல், வீண் செலவும், மனஸ்தாபமும், பிறர் உதவியை நாடும் நிலையும் தரும்.

***அதிர்ஸ்ட நாட்கள்: 03,07,09 திகதிகள்.***

சந்திராஷ்டமம் உள்ள நாட்களில் நோய், பிணி, துன்பம், கஸ்டம், நஷ்டம், அலைச்சல், இழப்புக்கள் ஏற்படலாம் என்பது சோதிட விதி ஆகும். இதனைக் கருத்தில் கொள்ளவும்.

### இவ்வார சந்திராஷ்டம நிலை.

*மிதுனராசி: 03,04* ஆம் திகதிகள்.
*கடகராசி: 05,06* ஆம் திகதிகள்.
*சிம்மராசி: 06,07* ஆம் திகதிகள்.
*கன்னிராசி: 08,09* ஆம் திகதிகள்.
ஏனைய இராசிக்கும் இவ்வாரம் சந்திராஷ்டமம் இல்லை.



கடந்த மாதம் 25ம் திகதி சம்பூர் உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்த காணிகள் விடுவிக்கப்பட்டு பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது. எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் இந்த நிகழ்வு நடந்தது. மீள்குடியேறியவர்களில் பெண் தலைமைத்துவத்தை கொண்ட 41 குடும்பங்களிற்கு வீடுகள் அமைக்கும் பொறுப்பை கனடியத் தமிழர் பேரவை பொறுப்பேற்றது. அந்த வீடுகளும் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வின் புகைப்பட தொகுப்பு





























# செவ்விளநீர் (King coconut water)

ஜே.சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், கிளிநொச்சி
0775056263



செவ்விளநீர் 78 மாதத்தில் குலையினை வெட்டி எடுக்க வேண்டும். இளநீர் அடர்த்தி கூடிய நிலையில் சீனிச்சத்தாக மாற்றப்படும். (குளுக்கோசு, புரக்கோசு) குறைந்த அளவில் சுக்குரோசு, கனிப்பொருள், விற்றமின், நடுநிலை PH.

**கனிப்பொருள் பெறுமானம் (இயற்கை அளவு)**

| சீனிச் சத்து மாதிரி | அளவு 100 மில்லி லீற்றர். |
|---|---|
| குளுக்கோசு | 2.0 - 3.0 |
| புறக்ரோசு | 2.0 - 3.0 |
| சுக்குரோசு | 0.1 - 0.3 |

| கனிப்பொருள் பெறுமானம் | அளவு (ppm) |
|---|---|
| பொட்டாசியம் | 1900 - 2500 |
| குளோரைட் | 1200 - 1600 |
| கல்சியம் | 100 - 200 |
| மகனீசியம் | 45 - 55 |

விற்றமின் (C உம், B உம்) உடன் அமினோ அமிலங்களும் சிறிய அளவில் காணப்படும்.

இளநீரில் உள்ள குளுக்கோஸ் மற்றும் புறக்ரோசு தேங்காய் முதிர்ச்சியடையும் போது சுக்குரோசாக மாற்றப்படுகின்றது.



**இதயச்சுவர்களில் ஏற்படும் பாதிப்பிலிருந்து பாதுகாக்கின்றது. இதயத்தைப் பலப்படுத்தி நாடிகளிலுள்ள தடிப்புக்களை அகற்றுகின்றது. இளநீர் (போலேற்) விற்றமின் B9 ஐக் கொண்டிருப்பதனால் கர்ப்ப காலங்களின்போது ஏற்படும் அனிமியா நோய்த்தாக்கத் தினைக் குறைக்கின்றது.**

இளநீரில் புரதச்சத்து குறைவாக இருப்பினும் பாலில் உள்ள புரதச்சத்தினை விட உயர் வானது.

- முற்றிய தேங்காய் நீரில் காணப்படும் மொத்த சீனிச்சத்தில் 90 சதவீதம் சுக்குரோஸ் ஆகும்.
- இளநீரில்காணப்படும்பொட்டாசியத்தின் அளவு தென்னைக்கு இடப்படும் பொட்டாசு உரத்தின் அளவினைப் பொறுத்து மாறுபடும்.
- இளநீரில் அஸ்கார்பிக் அமிலமும், விற்றமின் B பிரிவு அமிலங்களும் உள்ளன. அஸ்கார்பிக்அமிலத்தின் அளவு 22தொடக்கம் 37 மில்லிக்கிராம் இளநீரைச்சுற்றி இருக்கும். பருப்பின் வளர்ச்சிக்கு ஏற்ப இதன் அளவு குறைந்து வரும்.
- தென்னங்கள்ளினைப் பயன்படுத்தி விநிகர் தயாரிப்பது மட்டுமல்லாது, புதிய தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்தி இளநீரில் இருந்தும் விநிகர் தயாரிக்க முடியும்.
- முற்றிய தேங்காய் நீரில் இருந்து நெட்டாடிகோ.கோ என்றழைக்கப்படும் உண்பதற் கேற்ப ஜெலியும், மதுரசமும் தயாரிக்க முடியும்.
- கேரளாவிலுள்ள (இந்தியா) ஒரு தனியார் நிறுவனத்தினர் ஜேர்மன் நாட்டுத் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி தேங்காய் நீர் செறிச்சாறு தயாரிக்கின்றார்கள். இந்த செறிச்சாற்றினை நீருடன் கலந்து இன்சுவை பானமாக அருந்தலாம்.
- இந்த தேங்காய் நீர்ச் செறிவினை நல்ல நீருடன் கலந்து அதில் கொஞ்சம் எலுமிச்சை சாறு கலந்து சிளி2 வாயு செலுத்தி “தேங்காய் தண்ணீர’ லெமனேட்” என்ற புதிய பானத்தினைத் தயார் செய்து போத்தலில் அடைத்து இந்தியாவில் விற்பனை செய்கின்றார்கள்.
- இளநீர் காய்களிலிருந்து கிடைக்கும் வழுக்கலினைப் பயன்படுத்தி தேங்காய் ஜாம் தயாரிக்கலாம்.

**பதப்படுத்தப்பட்ட இளநீர்:** இளநீரினைப் பதப்படுத்தி பக்கெட்டுக்களில் பாதுகாப்பாக அடைத்து விற்பனை செய்யக்கூடிய தொழில் நுட்பத்தினை இந்தியா மைசூரில் உள்ள உணவுப்பொருள் ஆராய்ச்சி நிலையம் உருவாக்கியுள்ளது. இதனால் பல்வேறு தனியார் நிலையங்கள் இந்தத் தொழிலை வர்த்தக ரீதியாக செய்கின்றார்கள்.

**இளநீர் பதப்படுத்தலும் தொழில்நுட்பம்:** தற்காலத்தில் இளநீரையும், முற்றின தேங்காய் நீரையும் பதப்படுத்தி பக்கெட்டுக்களில் அடைத்து இன்சுவை பானமாக வழங்குவதற்கான தொழில்நுட்ப முறைகள் உள்ளன. மைசூரில் உள்ள பாதுகாப்புத்துறை உணவுப் பொருள் ஆராய்ச்சி கூடத்தில் இளநீரைப் பைக்கெட்டுக்களில் அலுமினியக் குவளைகள், மற்றும் பிளாஸ்டிக் புட்டிகள் அடைப்பதற்கு தொழில்நுட்பத்தினை உருவாக்கியுள்ளனர்.

இளநீர் அதிக சூட்டைத் தாங்காது. எனவே “நிசின்” போன்ற வேதிப் பொருட்களைப் பயன்படுத்தி, குறைந்த பட்ச வெப்பநிலைக்கு இளநீரை உட்படுத்தி விற்பனைக்குத் தேவையான அளவு கிருமி நீக்கம் செய்யப்படுகின்றது. (ஹஉத்சா நிறுவனம்) இந்த இளநீரை சாதாரண வெப்பநிலையில் 3 மாதங்களிலும், குளிரேட்டப்பட்ட நிலையில் 6 மாதமும் கெடாமல் வைத்திருக்க முடிகின்றது. இந்த தொழில்நுட்பத்தினை இந்தியாவில் உள்ள “தென்னை வளர்ச்சி வாரியம்” 5 நிறுவனங்களும் உரிமம் வழங்கியுள்ளது. அவர்களில் ஒரு நிறுவனத்தினர் இளநீரைப் பயன்படுத்தி “கொக்கோ ஜெல்” என்ற வர்த்தப் பெயரில் விற்பனை செய்துவருகின்றனர்.

இதே போன்று திருநந்தவனபுரம் (இந்தியா) மண்டல ஆராய்ச்சி நிலைய ஆய்வுகூடம் உருவாக்கியுள்ள தொழில்நுட்பத்தின் ஊடாக தேங்காய் நீரைச் சேகரித்தல், தரமேம்பாடு செய்தல், பாஸ்டர் முறையில் இளநீரைச் சூடுபடுத்தல், வடிகட்டுதல் புட்டிகளில் அடைத்தல், ஆகியவைகள் அதன் முக்கிய செய்நிலைகளாகும்.

உலகின் பல்வேறு நாடுகளிலும் இந்தத் தொழிநுட்பம் பாவிக்கப்பட்டு இளநீரைப் பைக்கற்றுக்களில் அடைத்து விற்பனை செய்கின்றனர்.

இளநீரைப் பருகுவதற்கு ஏற்ற முறையில் வெட்டுவதற்கும், ஓட்டை போடுவதற்கும் இரண்டு கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன.

ஒரு கருவியின் உதவியால், இளநீர்க்காயில் ஒரு சிறிய துளை போட்டு, அதன் வழியே உறிஞ்சு குழலை செலுத்தி இளநீரை உறிஞ்சிக் குடிக்க முடியும். இளநீரை உறிஞ்சிக் குடித்த பின்னர் வெறுமையான நீர்க்காயினை இரண்டாவது கருவியின் உதவியால் இரண்டாகப் பிளந்து துண்டாக்க முடியும். பின்னர், பிளந்த பகுதியில் உள்ள வழுக்கையினை ஒரு சிறிய கரண்டியால் எடுத்து உண்ணக் கொடுக்க முடியும். இந்தக் கருவிகள் மூலம் இளநீர்க்காய்களை பருகுவததோடு, ஏற்ற வகையில் விரைவாகவும், சுலபமாகவும் தயார் செய்து விட முடியும். கையில் காயம் ஏதும் ஏற்படாது.

தேங்காய் நீர் போன்ற அமிலப் பாஸ்யேற்டேஸ், கேற்றலேஸ், டிகைட்ரோ ஜென்ஸ் தயற்றேசு, பொராக்கைடேஸ், ஆர்.என்.ஏ பொலிமரேசுகள் பல இயற்கையான உயிரியக்க நொதியங்களை உருவாக்குகின்றது.

சாதாரணமாக உடற்தொழிற்பாட்டுக்குத் தேவையான விற்றமின்களைக் கொண்டிருக்கின்றது.

இவை,
விற்றமின் C (அஸ்கோபிக்கமிலம்)
விற்றமின் B1 (தயமின்)
விற்றமின் B2 (றைபோபிளேவின்)
விற்றமின் B3 (நியாசின்)
விற்றமின் B5 (பன்ரோதனிக்கமிலம்)
விற்றமின் B6 (பைரிடொக்சின்)
விற்றமின் B7 (போலிக்கமிலம்)
விற்றமின் B (நிக்கொட்டிளிக்கமிலம்)
விற்றமின் Ba (போலேற் அல்லது Folic Acid போலிக்கமிலம் இவ் விற்றமின்கள் நீரில் கரையக் கூடியவை கலத் தொழிற்பாட்டுக்குத் தேவையான துணை நொதியங்களின் உருவாக்கத்திற்குத் தேவையானவையாகவும் இருக்கின்றது.

விற்றமின் B6, குறைபாடு பல்வேறு சிறுநீரகத் தொழிற்பாட்டினை பாதிக்கின்றது.

விற்றமின் B6, B9 குறைபாடு
இதய நாடிச்சுவர் தடிப்படைதல். (ஆத்தரோஸ்கிளெரொசின்)

மாரடைப்பு நோய்கள் தாக்கும் சாத்தியங்களை அதிகரிக்கும். இளநீர் குருதிச்சுற்றோட்டத்தினை ஊக்குவித்து, குறைந்த குருதியமுக்கத்தினைப் பேணுகின்றது. இதயச்சுவர்களில் ஏற்படும் பாதிப்பிலிருந்து பாதுகாக்கின்றது. இதயத்தைப் பலப்படுத்தி நாடிகளிலுள்ள தடிப்புக்களை அகற்றுகின்றது. இளநீர் (போலேற்) விற்றமின் B9 ஐக் கொண்டிருப்பதனால் கர்ப்ப காலங்களின் போது ஏற்படும் அனிமியா நோய்த்தாக்கத் தினைக் குறைக்கின்றது. விற்றமின் C சிறந்த சமிபாட்டு அன்ரி ஒட்சிசன் ஆகும்.

இளநீருக்கு வயதினைக் குறைக்கும் தன்மை இருக்கின்றது என்பது ஒரு நல்ல செய்தி ஆகும். ஏனெனில் இவ் இளநீர் “சைரோகைனின்” சேர்வை காணப்படுகின்றது. கல வளர்ச்சியினையும் அபிவிருத்தியையும் ஒழுங்குபடுத்தும், தாவர வளர்ச்சி ஓமோனையும் கொண்டிருக்கின்றது. தாவர இழைய வளர்ப்பில் இழைய வளர்ப்பு ஊடகமாகத் தொழிற்படுகின்றது. இளநீரில் காணப்படும் சைரோகைனின் கலப்பிரிவிற்குத் துணைபுரிந்து விரைவான வளர்ச்சியினைத் தூண்டுகின்றது. இளநீரை அருந்தும் போது கலக்கட்டமைப்பினை உறுதியாக்கி வயதாவதனைத் தாமதப்படுத்துகின்றது. இளநீரில் வயதாவதைத் தாமதப்படுத்துவது இயல்பானது. மனிதர்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் ஆகும். மனிதர்களின் ஒளிக்கதிரினால் பாதிக்கப்பட்ட நோய்களினைக் குணமாக்குவதற்கும் தேவையான “கைகெடின்” இளநீரில் இருப்பதனால் தோல் பராமரிப்பு உற்பத்திகளை உருவாக்குவதற்குரிய வாய்ப்புக்களை வழங்குகின்றது.




திருமதி ச.கார்த்திஹாயினி
வின்னீஸ் லக்கி
இந்தியன் பியூட்டி பார்லர்
திருநெல்வேலி
Joykarthiha 3014@gmail.com



நம் சருமத்தின் ஆரோக்கியத்திற்கும் சருமத்தை அழகூட்டவும் தானிய வகைகளை எவ்வாறு உபயோகப் படுத்தலாம் என பார்க்கலாம்.

**கடலைப்பருப்பு:**

கடலைப்பருப்பும் இதிலிருந்து மாவாகும் கடலை மாவும் சமயலறையில் அதிகமாக பயன்படுத்தக் கூடியது. ஆபத்பாந்தாவன் மாதிரி அநேக சந்தர்ப்பங்களில் கை கொடுக்கக் கூடியது இந்த கடலை மாவு தான்.

இது உணவுப் பொருளாக மட்டுமல்லாது. சிறந்த அழகு சாதனமாகவும் கருதப் படுகின்றது. எளிய செலவில்லாத முகத்திற்கு போடக் கூடிய பக் கடலை மா தான். இது தோலை இறுகச் செய்யும். இறந்த செல்களை அகற்றக் கூயது. நல்ல நிறமாக வர வேண்டுமென்பார்கள். கடலை மாவை உபயோகித்தால் சருமம் பளிச்சென்று இருக்கும். கடலை மா ஒரு சிலருக்கு அலர்ஜி ஆவதுண்டு. அவர்கள் கடலை மாவுடன் பன்னீர் தேன் பால் தயிர் இவைகளில் ஏதாவது ஒன்றை சிறிதளவு கலந்து முகத்தில் பக்காக போடலாம். ஏதாவதொன்றைத் தேர்ந்தெடுத்து போட வேண்டும்.

**பச்சை பயறு**

பொதுவாகவே எல்லோருடைய சருமத்திற்கும் பொருந்தக் கூடிய தானிய வகை பச்சைபயறு. இது பித்தத்தை போக்க கூடியது. புரதச் சத்து அதிகம் ஓட்டும் தன்மை அதிகம் கொண்டது.

நமது சருமம் புரதத்தால் ஆனது. உணவாகச் சாப்பிடும் போதும் புரதம் நமக்கு தேவையான ஒன்று. அதே சமயம் புரதத்தை வெளி புரதத்தில் கொடுக்கும் பொழுது சருமம் மென்மையாக மாறுகின்றது. முளை கட்டிய பச்சைப் பயற்றில் ஏராளமான சத்துக்கள் அடங்கி இருக்கின்றன.

பயத்தம் மாவுடன் பால் தேன் பன்னீர் கலந்து சருமத்திற்கு பூச உபயோகப் படுத்தலாம். அல்லது வெள்ளரிச் சாற்றை பயத்தம் மாவுடன் கலந்து பக்காக பயன் படுத்தலாம். எண்ணெய் குளியல் எடுக்கும் போது சிலருக்கு சீகக்காய் தேய்த்து குளிப்பது அல்ஜியாக இருக்கும். கண் எரிச்சலைக் கொடுக்கும். அவர்களும் சரி சிறு குழந்தைகளுக்கு எண்ணெய் குளியலின் போதும் சரி பயத்தம் மாவு தேய்த்துக் குளிக்கலாம்.

உலர்ந்த சரும வகைக்கு பால் ஆடையுடன் பயற்றம் மாவையும் எண்ணெய் சருமத்திற்கு பயற்றம் மாவுடன் ஒரேஞ் சாற்றையும் கலந்து உபயோகப்படுத்தலாம். இதைத் தவிர வெள்ளரிச் சாறு பன்னீர் இளநீர் இவைகளில் ஏதாவுது ஒன்றைச் சேர்ப்பதும் சருமத்திற்கு எந்த வித தீங்கம் செய்யாது.

**கொண்டைக் கடலை மா:**

வெள்ளை கொண்டைக் கடலையை ஊற வைத்து அரைத்து உபயோகப்படுத்தலாம். ஆல்லது மாவாகவும் உபயோகப்படுத்தலாம். கொண்டை கடலை மா சருமத்தின் நிறத்தை அதிகரிக்க செய்யும். இந்த மாவுடன் பால் அல்லது தேன் கலந்து சருமத்தில் பூசிக் கழுவலாம்.

ஐந்திலிருந்து எட்டு சொட்டுகள் வரை தேனைக் கொண்டைக் கடலை மாவுடன் சேர்த்து கருமையாக இருக்கும் இடங்களில் குறிப்பாக முழங்கை முழங்கால் முட்டிகளில் தேய்த்து வந்தால் கருமை நிறம் போகும்.

**அரிசி:**

இறந்த செல்களை அப்புறப்படுத்துவதில் அரிசி மாவுக்கு மிகுந்த பங்கு உண்டு. அரிசி மாவுடன் தேங்காய் எண்ணெய் சேர்த்து தடவி ஐந்து நிமிடங்கள் ஊற வைக்க வேண்டும். பின் கையில் நீரை தொட்டு முகத்தில் மெதுவாக வட்டமாக தேய்த்தால் சருமத்தின் மேலுள்ள இறந்த செல்கள் போய் விடும். (இது இயற்கையாக ஸ்கிறப் செய்யும் முறையாகும். இதை 10 அல்லது 15 நிமிடங்கள் தினமும் செய்து வரலாம். அடிக்கடி செய்ய கூடாது) கஞ்சியோடு பச்சரிசி மாவைச் சேர்த்த முக்தில் பூசி 15 நிமிடங்கள் ஊற வைத்துக் கழுவலாம். இது தோலை இறுக வைத்துக் கழுவலாம். இது தோலை இறுகச் செய்து முகத்திற்கு பளபளப்பை கொடுக்கும்.

**கறுப்பு எள்**

எள்ளில் இரும்புச் சத்து அதிகம் இருக்கின்றது. அதிலிருந்து எடுக்கப்படும் நல்லெண்ணெய் உடல் ஆரோக்கியத்திற்கும் குளிர்ச்சிக்கும் முடி வளர்ச்சிக்கும் நல்லது. கொலஸ்ட்ரோல் இதில் குறைவாகவும் உள்ளது. அழகு நிலையங்களில் அரோமா த்தெரபிக்கு carrier oil ஆக இதை உபயோகப்படுத்தலாம். **தொடரும்...**






வீட்டை வண்ணமயமாக அலங்கரிப்பது என்பது எளிமையான விடயம் அல்ல. பார்ப்பவர்களின் மனதினை கவர்ந்திழுக்கும் வகையில் வண்ணங்களை தேர்வு செய்து பூசவேண்டும். அழகிய முறையில் வடிவமைக்கப்பட்ட வீடுகளும் அம்சமான வண்ணங்களின் கலவையில் கலந்திருக்காவிட்டால் அறைகள் பொலிவை இழந்து காட்சியளிக்கும். கட்டுமான முறையில் கவனம் செலுத்துவதை போலவே வண்ணம் பூசுவதற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

அதனால் வீட்டின் அமைப்பிற்கு ஏற்ப வண்ணங்களை தேர்வு செய்ய வேண்டும். நவீன முறையில் கட்டடப்பட்ட வீடுகளுக்கு அதன் தன்மைக்கு ஏற்ற வண்ணங்களை பூசுவது கட்டுமானத்துக்கு கூடுதல் அழகு சேர்க்கும். சுவர்களில் வண்ணங்களை பூசியவுடன் வண்ணங்களுக்கு எடுப்பாக இருக்கும். மாற்று வண்ணங்களை அதன் மீது பிரத்தியேக தூரிகைகளை கொண்டு தீட்டுவது வீட்டின் உள் அலங்காரத்திற்கு அழகு சேர்ப்பவையாக அமையும்.

வீட்டின் உட்புறங்களிலும், வெளிபுறங்களிலும் பூசும் வண்ணங்களை கலைநயத்துடன் தேர்வு செய்வது வீட்டுக்கு ஆடம்பர தோற்றத்தை ஏற்படுத்தி தரும். பொதுவாக வீட்டின் வெளிபுறங்களுக்கு அடர்த்தியான வண்ணங்களை பூசுவது வழக்கம். ஆனால் தற்போது வெளிர் வண்ணங்களான மஞ்சள், இளஞ்சிவப்பு, இளம்பச்சை போன்ற நிறங்களையும் வீட்டின் வெளிபுறங்களில் பூச ஆரம்பித்துள்ளனர்.

அடர் வண்ணங்கள் வீட்டின் வெளிபுறங்களில் படியும் தூசி, அழுக்கு, மழை போன்ற காரணிகளால் சேதமடைந்தாலும் அவற்றின் கடினமான தன்மையில் இருந்து அவை விடுபடுவதில்லை. இதனாலே கடினமான வண்ணங்களுக்கு முன்பு முக்கியத்துவம் கொடுத்து வந்தனர். ஆனால் தற்போது நவீன காலத்தின் தாக்கத்தினாலும் தொழில்நுட்ப முன்னேற்றத்தினாலும் அழுக்கு, தூசிகளுக்கு ஈடு கொடுக்கும் பிரத்தியேக வகையிலான வண்ணங்கள் சந்தைகளில் கிடைக்கின்றன. இதனால் வீட்டின் வெளிப்புறங்கள் இரண்டு அல்லது மூன்று மென்மையான வண்ணங்களில் பளிச்சிடுகின்றன.

வண்ணங்கள் அழகில் பங்கெடுத்தாலும் தூரிகைகள் இவற்றை முழுமை பெற செய்கின்றன. மக்களின் தேவைக்கு ஏற்ப 'டெக்சர்' எனப்படும் தொடு உணர்வுக்கு ஏற்ப பல முறைகளில் வண்ணம் பூசப்படுகின்றன. இதனால் இரண்டு வண்ணங்கள் என்ற நிலை மாறி தற்போது தேவைக்கு ஏற்ப மூன்று வண்ணங்கள் மற்றும் ஐந்து வண்ணங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

தூரிகைகளின் பூச்சுத்திறன் மாறுபடுவதும் மேன்மை மற்றும் கடின தன்மைகளை பிரதிபலிப்பதுமே இதன் முக்கிய காரணமாகும். மேலை நாடுகளை போன்று இந்தியாவிலும் டிஜிட்டல் பெயிண்டிங் முறைகள் பிரபலமாகி வருகின்றன. இதனால் வண்ணத்தின் குறியீடுகளையும், வீட்டின் அளவீடுகளையும் குறிப்பிட்டால் போதுமானதாகும். மற்ற பணிகளை வர்ணம் பூசும் இயந்திரங்களே முடித்து விடுகின்றன. இந்த முறையிலும் நவீன தூரிகைகள் பயன்படுத்தப்படுகின்றன.

வீட்டின் பிரதான பகுதியான வரவேற்பறை தற்போது பல வண்ணங்களில் மின்ன ஆரம்பித்துள்ளது. வீட்டிற்கு வரும் விருந்தினர்களை அசத்தும் வகையில் பிரத்தியேக தூரிகைகளினால் பூசப்பட்ட இரு வேறு நிறங்கள் கொண்ட சுவர்களாகவும் மிளிர தொடங்கி இருக்கின்றன. இவ்வாறு இரு வேறுபட்ட வண்ணங்களில் அமைய பெற்ற சுவர்களால் வீட்டின் உள்பகுதிகளுக்கு கூடுதல் அழகிற்காக செய்யப்படும் உள் அலங்கார வேலைகள் குறைகின்றன. சுவர்களில் பூசப்படும் வண்ணங்களை சிறந்த கலைநயத்துடன் வரைய தற்போது பிரத்தியேக தூரிகைகள் கிடைக்கின்றன.

இதனை கொண்டு எளிமையான முறையில் சுவர்களில் இருவேறுபட்ட வண்ணங்களை ஓவிய முறையில் வரைந்திடலாம். இம்முறையில் பூசப்படும் வண்ணங்கள் விருந்தினரின் உள்ளங்களை ஈர்ப்பதுடன் வீட்டின் அழகையும் உயர்த்துகின்றன. அடர் வண்ணங்கள் மற்றும் மென்மையான வெளிர் வண்ணங்கள் என இருசேர கலந்து பூசுவதன் மூலம் சுவர்களை பளிச்சிட செய்ய முடியும்.

# நீங்களும் பேஸ்புக் வைத்திருக்கும் பெண்மணியா?



இன்று நமது பெண்கள் நிறையப் பேர் பேஸ்புக் கணக்கு வைத்துள்ளனர். அலுவலகத்தில், சமையலில், நடைப்பயிற்சியில், யாரிடமாவது பேசிக் கொண்டு இருக்கையில்... ஏன் குளியலறைக்குள் நுழையும் பொழுதும் தொலைபேசியை வைத்து பேஸ்புக்கை நோண்டும் பெண்கள் தான் அதிகம். அதுவும் குறைந்தது மணித்தியாலத்திற்கு ஒரு ஸ்ரேற்றஸ் தன்னும் போடா விட்டால் நமது பெண்களுக்கு தூக்கம் வராது.

பேஸ்புக் பயன்படுத்தும் பெண்கள் ஒன்றை கவனிக்க வேண்டும். உங்கள் விபரம் முழுதையும் பதிவிடுவதை தவிர்க்க வேண்டும். புறபைல் உங்கள் படமாக இருப்பின் உங்கள் நண்பர்களுக்கு மட்டும் அல்லது நீங்கள் விரும்பும் குறிப்பிட்ட நண்பர்களுக்கு மட்டும் பார்வையிடும் வகையில் உங்கள் புறபைல் ஐ வைத்து கொள்ளுங்கள்

பெண்களுக்கு அதிகமாக நட்பு கோரிக்கைகள் வருவது சாதாரண விடயம் தான். ஆனால் அது முகம் தெரிந்த உங்கள் நெருங்கிய நண்பர்களாயின் உடனடியாகி இணைத்துக் கொள்ளலாம். இல்லையேல் அவருடைய பேஸ்புக் பக்கத்தை பார்த்து அவருடைய பதிவுகள் எவ்வாறு உள்ளது, சிறந்த பதிவுகளா என்பதை கணிப்பிட்டு, அவர் உங்களுக்கு குறும்செய்தி ஏதும் போடுகிறாரா என்று பார்த்து அவரை நண்பராக்கலாம். இல்லையேல் அவரை நீக்கிவிடவும்.

சிலரை நல்லவராக நினைத்து நீங்கள் "அக்சப்ற்" பண்ணினீர்கள் என்று வையுங்களேன். தேவையற்ற இச்சை தூண்டும் படங்கள் வீடியோக்களை உங்களுக்கு "ரக்" பண்ணினாலோ அல்லது குறும்செய்தி மூலம் அனுப்பினாலோ அல்லது அனுப்ப முயன்றாலோ உடனடியாக அவரை நண்பர் பட்டியலில் இருந்து நீக்கி விடுங்கள்.

சில பேர் இருக்கிறார்களே அரியண்டம் பிடித்தவர்கள், சந்தேகம் பிடித்தவர்கள். நல்லவர்கள் போல அக்சன் போட்டு உங்களிடம் விடயம் கறக்க முயல்வார்கள். நீங்கள் உண்மையில் பெண்தானா? அப்படியாயின் ஒரு போட்டோ போடுங்கள், வொய்ஸ் மெசேச் அனுப்புங்கள், பார்த்து விட்டு அழித்து விடுகின்றேன் என்றெல்லாம் சொல்வார்கள். நம்பி அனுப்பி விடாதீர்கள். ஒரு போட்டோவை வைத்து உங்கள் வாழ்க்கையை விளையாடி விடுவார்கள்.

இப்படி கேட்பவர்கள் உங்களை பிறண்ட் ஆக வைத்திருக்கும் நோக்கத்துடன் பேசவில்லை. வேறு எதையோ எதிர்பார்க்கின்றார்கள் என்பதை மறந்து விடாதீர்கள். உங்களிடம் போட்டோ கேட்டால், 'என்னிடம் போட்டோ இல்லை. நான் பெண் என்பதை எனது கணவருக்கு நிரூபித்தால் போதும்' என்று நறுக்காக சொல்லி விடுங்கள். முகம் பார்த்து முகவரி பார்த்து வருவதில்லை நட்பு. உள்ளங்கள் இயைவது என்பதை விளங்க வையுங்கள். அதையும் மீறினால் உடனடியாக பிளக் செய்யுங்கள்.

அதே போல் உங்கள் முகப் புத்தகத்திலும் நல்ல விடயங்களை பதிவிடுங்கள். செயார் செய்யுங்கள். அத்துடன் உங்கள் சமூகப் பிரச்சினைகளுக்கு முதலிடம் கொடுத்து பதிவிடுங்கள். உங்களுக்கு நம்பிக்கையானவராக தோன்றுபவர்களை மட்டும் பிறண்டாக வைத்திருங்கள். மற்றவர்களை தவிர்த்து விடுங்கள். நீங்கள் எளிதில் ஏமாறும் சுபாவம் உடையவராயின் ஒரு நண்பரை கென்போம் பண்ண முதல் நூறு தடைவ சிந்தியுங்கள். உங்கள் அறிவையும் திறமையாயும் காதலிக்கும் வாழ்த்தும் ஊக்குவிக்கும் நண்பர்களே உண்மையான நண்பர்கள் என்பதை மறந்து விடாதீர்கள். இன்றய பாதுகாப்பற்ற உலகில் ஒவ்வொரு பெண்களும் எம்மை நாமே பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். அடுத்தவர்களிடம் நாம் பழகும் வதம் தான் எமது பாதுகாப்பில் தங்கியுள்ளது. எனவே நல்லவர்களோடு நல்லவர்களாக பழகி பெண்கள் தம்மை தாமே பாதுகாக்க முயன்றாலே பாதி பிரச்சினை தீர்ந்து விடுமல்லவா?

# கர்ப்ப காலத்தில்...



கர்ப்பம் உறுதியானால் தலைசுற்றல், வாந்தி, லைட்டாக உதிரம் கூட வரலாம். காரம் மற்றும் எண்ணெய் அதிகம் இல்லாமல், 3 மணி நேரத்துக்கு ஒருமுறை கொஞ்சம் கொஞ்சமாக சாப்பிடலாம். ப்ரூட்ஸ், தண்ணீர் என நிறைய எடுத்துக் கொள்ளலாம். தேவையான ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். வாந்தி அதிகமாக இருந்தால் மருத்துவர் ஆலோசனைப்படி விட்டமின் பி காம்ப்ளக்ஸ் மாத்திரைகளை எடுத்துக் கொள்ளலாம்.

இரத்த சோகை இருந்தால் டயட்டில் பீட்ரூட், கேரட், பேரீச்சை, ஆப்பிள், கீரை வகைகளைச் சாப்பிட வேண்டும். அதிகக் கொழுப்புள்ள உணவு வகைகள், ஃபாஸ்ட் ஃபுட், கோக் போன்ற உணவுகளைச் சாப்பிட்டு எடையை ஏற்றிக் கொள்ளக்கூடாது.

### நீங்கள் செய்ய வேண்டிய ஸ்கேன் மற்றும் டரஸ்ட்கள்!

கர்ப்ப காலத்தை: முதல் மூன்று மாதங்கள், இரண்டாவது மூன்று மாதங்கள், மூன்றாவது மூன்று மாதங்கள் என மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் கொள்ள வேண்டும்.

முதல் ஆறு மாதங்கள், மாதம் ஒரு முறையும், மீதி மூன்று மாதங்கள் மூன்று வாரத்துக்கு ஒரு முறையும் செக்கப்புக்குப் போக வேண்டும்.

முதல் மூன்று மாதங்களில் வாந்தி, எடை குறைதல், களைப்பு, தலைசுற்றல் இருக்கும். இந்தக் காலகட்டத்தில் இரத்தப் பரிசோதனை எந்தப் பிரிவு இரத்தம், பால்வினைத்தொற்று போன்ற நோய்கள் இருக்கிறதா, முக்கியமாக இரத்தம் எதிர் மறை குருப்பா, இரத்த சோகை இருக்கிறதா என்பது போன்ற முக்கியமான

### கணவர்களே...

முதல் மூன்று மாதங்களுக்கு தாம்பத்ய உறவினைத் தவிர்க்கலாம் அல்லது மனைவியின் உடல் நிலையைப் பொறுத்து மிதமாக ஏற்படுத்திக் கொள்ளலாம். இல்லாவிட்டால் அபார்ஷன் ஆக நிறைய வாய்ப்புகள் இருக்கும். கர்ப்ப காலத்தில் பிரயாணங்கள் வேண்டாம்.

கர்ப்பத்தின் போது யோகா, உடற்பயிற்சிகள் செய்வது என்றால், வயிறு விரிந்து சுருங்கும் சில பயிற்சிகளைத் தவிர்க்க வேண்டும்.

முதலாவது, இரண்டாவது மாதத்தில் மூச்சுப்பயிற்சி மற்றும் பொருத்தமான உடற்பயிற்சிகளைத் தெரிந்து கொண்டு மனைவியுடன், கணவனும் சேர்ந்து செய்தால், இருவருக்கும் இடையில் நல்ல ஒரு புரிதலும், இன்வால்வ் மென்ட்டும் வரும்! நடைப் பயிற்சியும் நல்லது. மூன்றாவது மாதத் துவக்கத்தில் முதல் ஸ்கேன் செய்து கருக் குழாயிலிருந்து கரு, கர்ப்பப்பைக்கு வந்து விட்டதா என்பதைப் பார்க்க வேண்டும்.

இரண்டாவது ஸ்கேன் இது குழந்தைக்கு நார்மலான, நல்ல இதயத் துடிப்பு இருக்கிறதா என்று பார்ப்பதும் அவசியம்.

மூன்றாவது ஸ்கேனை பதினாறிலிருந்து இருபது வாரத்திற்குள் எடுக்க வேண்டும். இது குழந்தையின் அங்க அவயங்கள் சரியாக இருக்கிறதா என்று தெரிந்து கொள்வதற்கு.

நான்கு, ஐந்து, ஆறாம் மாதங்களில் சர்க்கரையும், பி.பி.யும் உயர் இரத்த அழுத்தமும் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். (இதற்கு முன் இல்லாமல் இருந்து இப்பொழுது இருந்தால் பயப்படத் தேவை இல்லை. குழந்தை பிறந்து ஆறு வாரங்களில் இது சரியாகி விடும்.)

குழந்தையின் அசைவு 7ம் மாதத்திலேயே தொடங்கிவிடும். அப்படித் தெரியவில்லை என்றால் மருத்துவரை அணுக வேண்டும்.

வாரம் அரை கிலோ எடை ஏறுவதுதான் மெடிக்கலி ஆரோக்கியமான, சரியான விஷயம். பிரசவகாலத்தில் கடைசி மூன்று மாதங்களில்தான் சரியான எடைகூடும்.

கடைசி மூன்று மாதங்களில் நேராகப் படுக்கக்கூடாது. குழந்தையின் எடை கர்ப்பப்பையை அழுத்தி இரத்த ஓட்டத்தைத் தடுக்கும். இடது பக்கமாகத் திரும்பிப் படுக்க வேண்டும். எப்பொழுது எழுந்தாலும் ஒரு பக்கமாகத் திரும்பி எழ வேண்டும்.

டெலிவரி நேரத்தில் அல்லது 9வது மாதத்தில் சில நேரத்தில் வலி தோன்றும்... பிரசவ வலி என்றால் விட்டு விட்டு வந்து கொண்டே இருக்கும். போகப் போக வலி அதிகரிக்கும். சாதாரண வலி என்றால் வந்து விட்டுப் போய் விடும்.

எட்டு மணி நேரத்தில் இருந்து 10 மணி நேரம் வரை வயிற்றுக்குள் அசைவு தெரியவில்லை என்றாலோ, வலி இல்லாமல் சிறுநீர் மாதிரி தண்ணீர் போய்க் கொண்டு இருந்தாலோ, சில சமயம் வலியுடன் நீர்போவதும் உணர்ந்தாலோ உடனே மருத்துவரைத் தேடிப் போகவேண்டும்.



# ஓவர் நைற்றில் உலககிண்ணம் பெறுவதெப்படி?

அன்ரூ இக்னேஷ்

இலங்கை ரசிகர்களிற்கு இனி இழப்பதற்கு ஒன்றுமில்லை. அணிக்கும் அப்படித்தான். அடிமேல் அடிவாங்கும் கதை முற்றுப்பெறாமல் தொடர்கிறது. விளைவு, T20 உலகக்கிண்ண தொடரில் அரையிறுதி வாய்ப்பை இழந்து முதற்சுற்றுடனேயே இலங்கை நாட்டுக்கு திரும்புகிறது. T20 உலகக்கிண்ணத் தொடரில் இலங்கையணி அரையிறுதிக்கு தேர்வாகாமல் திரும்பும் முதல் சந்தர்ப்பம் இது.

இந்த உலககிண்ண தொடரில் குழு 1 இல் இலங்கையணி இருந்தது. அதுதவிர தென்னாபிரிக்கா இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள், ஆப்கானிஸ்தான் ஆகிய அணிகளுமிருந்தன. சுப்பர் 10 ஆட்டங்களின் முடிவில் இலங்கையணியும், ஆப்கான் அணியும் சம புள்ளிகளை பெற்றிருந்தன. நிகர ஓட்டவேகத்தில்தான் இலங்கை சற்று முன்னணியிலிருந்தது. இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியைத்தான் பெற்றன.

இந்த குழுவில் இலங்கை வென்றது ஆப்கானை. அன்றைய போட்டிகூட ஆப்கான் வீரர்கள் ஏகப்பட்ட தவறுகளை செய்த போட்டி. நிறைய பிடியெடுப்புக்களை நழுவவிட்டனர். பந்தை தடுப்பதிலும் மோசமாக செயற்பட்டனர். அதன் பின்னான ஆட்டங்களில் ஆப்கானிடம் ஒரு நேர்த்தி தெரிந்தது. விளைவு, மேற்கிந்தியாவுடன் 'திரில்' வெற்றி பெற்றனர்.

தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள் என டெஸ்ட் விளையாடும் பலமான எல்லா நாடுகளிடமும் இலங்கை வாங்கிக்கட்டியது. இங்கிலாந்துடனான போட்டியில் மட்டும் திடீரென மத்திய வரிசையில் ஒரு எழுச்சி ஏற்பட்டது. இலங்கையணியிடம் அண்மைக்காலங்களில் இப்படியான எழுச்சிகள் காணவே கிடைக்கவில்லை.

அன்றைய போட்டியில் திசர பெரேரா இன்றும் மூன்று அல்லது நான்கு பந்துகளை நிதானமாக சந்தித்திருந்தால் எந்த நெருக்கடியுமின்றி இலங்கை வென்றிருக்கலாம். ஆனால் அது நடக்கவில்லை. திசரபெரேரா நிறைய அனுபவமுள்ள வீரர். 100 இற்கும் அதிக ஒருநாள் போட்டிகளும், 50 இற்கும் அதிக T20 போட்டிகளிலும் ஆடிவிட்டார். ஆனால் ஆட்டத்தின் போக்கை மாற்றும் வீரராக ஓரிரண்டு போட்டிகளில் மட்டுமே அவரிருந்துள்ளார். வீசப்படும் பந்துகள் அத்தனையையும் சிக்சராக ஓங்கி அடிப்பது ஒன்றுதான் அவரது குறி. ஓங்கி அடிக்கப்படும் பந்துகளிற்கு இரண்டு வாய்ப்புக்கள்தான் உள்ளன. ஒன்று எல்லைக்கோட்டை கடந்து விழுவது. அல்லது எல்லைக்கோட்டினுள் விழுவது. இரண்டாவது நடக்கும் சந்தர்ப்பங்களில் பிடியெடுக்கப்பட்டு அவர் ஆட்டமிழந்து விடுகிறார். 'ஷொட்' தேர்வில் பெரேரா கற்றுக்கொள்ள நிறைய உள்ளது. அப்படி முழுமையான நுணுக்கத்தை கற்று ஆட வேண்டுமென பெரேராவை வற்புறுத்துவது அவரது இயல்பான ஆட்டத்தை பாதிக்கும். அது T20 போன்ற அவசரகதி ஆட்டங்களிற்கு பொருத்தமாகவும் இருக்காது. ஆனால் பெரேராவின் இந்தபாணி ஆட்டம் ரசிகர்களை சீற் நுனிக்கு கொண்டுவந்து ரென்சனை எகிற வைக்குமே தவிர, வெற்றியாக மாற்றாது.

இந்த தோல்விகள் அனைத்தும் பெரேராவினால் நடந்ததல்ல. ஆனால் அணி மறுசீரமைப்பொன்று நிகழுமாக இருந்தால் உருளும் தலைகளில் ஒன்றாக அவருமிருப்பார் என்று நிச்சயமாக கூறலாம்.

இலங்கையணி கடந்த ஒருவருடமாகவே வடிவேலுவை போல எல்லா இடங்களிலும் கும்மியெடுக்கப்பட்டு கொண்டிருக்கிறது. அதனால் உலககிண்ணத்திற்கு அணி சென்றபோது பெரிய எதிர்பார்ப்புக்கள் எதுவும் இருக்கவில்லை. அணித்தேர்விற்கு முதல்நாள் இரவு தேர்வுக்குழுவில் நடந்த அதிரடி மாற்றங்கள் எல்லாம் ரசிகர்களிற்கு சிறிய ஆறுதல்தானே தவிர வேறில்லை. சங்கா வந்தார் என சமூகவலைத்தளங்களில் ரசிகர்கள் பூரித்ததையெல்லாம் எந்தவகைக்குள் அடக்குவதென்றே தெரியவில்லை.

மூத்தவீரர்கள் ஒன்றாக ஓய்வுபெறுவது இலங்கையில் மட்டுமே நடந்த விடயமல்ல. அவுஸ்திரேலியாவில், இந்தியாவில் எல்லாம் சமீபத்தில் நடந்த உதாரணம். தேர்ச்சிபெற்ற அணி ஓய்வுபெற புதிய அணியை கட்டியெழுப்புவது கட்டிடம் கட்டுவதைப் போன்ற விவகாரமல்ல. அது தொழில்நுட்பமும், விளையாட்டின் கலைத்துவமும் இணையும் புள்ளி.

மூத்தவீரர்கள் ஓய்வுபெறும் சமயத்தில் இரண்டாம் அணி தயாராக இருந்திருக்க வேண்டும். அதற்கான தயார்படுத்தல்கள் எதுவுமே நடக்காமல், 'ஓவர் நைற்றில் உலகக்கிண்ணம்' வேண்டுமென எதிர்பார்க்க முடியாது.

இப்பொழுது இலங்கையணி சந்திக்கும் பிரதான சவால் நிலையான பெறுபேற்றை வெளிப்படுத்தும் திறமையான வீரர்கள். புதிய தெரிவுகளில் மிலிந்த சிறிவர்த்தன, சமீர போன்றவர்கள்தான் நம்பிக்கையளிக்கிறார்கள். மற்றவர்களிற்கு இன்னும் வாய்ப்புக்கள் வழங்கிப்பார்க்க வேண்டும்.

புதியவீரர்களை கண்டுபிடிக்கும் பொறிமுறை சரியாக அமையாதால் தேசிய அணிக்குள் வீரர்களை வைத்திருந்து பயிற்சியளிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை இலங்கைக்கு நேர்ந்துள்ளது. இதனால்த்தான் ஒருவருடமாக இலங்கை மரண அடி வாங்கிக்கொண்டிருக்கிறது. கடந்த ஒருவருடத்தில் T20 போட்டிகளில் இலங்கை பெற்ற வெற்றிகளின் எண்ணிக்கை வெறும் மூன்று மாத்திரம்தான்.



வீரர்களை கண்டறிய, அணியை கட்டியெழுப்ப முறையான செயற்திட்டம் இல்லாதவரை இலங்கையின் தோல்விக் கதையும் தொடரப் போகிறது.

# விடாமுயற்சிக்கு இன்னொரு பெயர் நவநீதன்

சுட்டு
chuddu.deepam@gmail.com

என்னதான் திறமையிருந்தாலும் தமிழர்களிற்கு எட்டாக்கனியாக இருப்பதிலொன்று சர்வதேசரீதியிலான பங்குபற்றல். கல்வியாக இருந்தாலும் சரி, விளையாட்டாக இருந்தாலும் சரி, நிறைய தடைகளை கடந்துதான் அதனை அடைய வேண்டிய நிலை தமிழர்களிற்கு உள்ளது. இதிலும் விளையாட்டுத்துறை என்பது ஏராளம் சவால்கள் நிறைந்தது. சர்வதேசரீதியிலான போட்டிகளில் தமிழர்கள் கலங்துகொள்வதென்பது கிட்டத்தட்ட அதிசயம்தான். அப்படியான சவால்களின் மத்தியில் தடைகளை கடந்து சாதித்துள்ளார் நவநீதன்.

தாய்லாந்தில் நடந்த சர்வதேச மரதன் போட்டியொன்றில் கலந்து கொண்டு வெள்ளிப்பதக்கத்துடன் திரும்பியுள்ளார் வவுனியாவை சேர்ந்த நவநீதன். பொருளாதார நெருக்கடிமிக்க குடும்பத்வீயும் கவனித்துக் கொண்டு, சர்வதேசபோட்டியொன்றில் பதக்கம் பெறுவதென்பது சாதாரண விடயமல்ல. அதனை சாதித்திருக்கிறார் நவநீதன். வவுனியாவிலுள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்றோம்.

வவுனியாவின் கூமாங்குளம் கிராமத்தில் வயல்வெளிகளிற்கு மத்தியில் ஒரு வீடு. செங்கற்கள் அடுக்கப்பட்டு, கட்டி முடிக்கப்படாத நிலையில் இருக்கிறது. மேற்புறம் தகரத்தால் வேயப்பட்டுள்ளது. இதுதான் நவநீதனின் வீடு. வீட்டைப்பார்த்தால் குடும்பப் பொருளாதாரத்தை புரிந்து கொள்ள முடிகிறது.

பாதி கட்டப்பட்ட அந்த வீடு முழுவதும் வெற்றிப்பதக்கங்கள். வீட்டுக்குள் பதக்கங்கள் உள்ளனவா, பதக்கங்களிற்குள் வீடு உள்ளதா என்று யோசிக்க வைக்கும் தோற்றம்.

தந்தை இல்லாத அந்த குடும்பத்தின் பாரத்தை நவநீதன்தான் சுமக்கிறார். தாயார், ஒரு அக்கா, இரண்டு தம்பி, தங்கைகள் உள்ள குடும்பத்தை கவனிப்பது, பயிற்சிகள் பெறுவது, போட்டிகளில் பங்கெடுப்பதென ஓயாத போராட்ட வாழ்க்கை நவநீதனது.

'எனது குடும்பத்தில் யாரும் நல்ல விளையாட்டுவீரர்கள் கிடையாது. நான் மட்டும்தான் விளையாட்டு வீரனாகியுள்ளேன். 21 வயதில் தான் எனக்குள் ஒருவன் ஒளிந்திருப்பதை உணர்ந்தேன். நெடுந்தூர ஓட்டப்போட்டிகளில் என்னால் வெற்றிபெற முடியுமென்பதை அப்பொழுது உணர்ந்தேன். கழகமட்டப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிகளை பெற்றேன். பின்னர் மாவட்ட மட்டம், மாகாண மட்டமென எல்லைகள் விரியத் தொடங்கியது' என சுருக்கமான அறிமுகம் சொன்னார்.

நவநீதனின் உழைப்பை நம்பி குடும்பமிருந்தது. அதனால் விளையாட்டுக்கு சமமாக வேலைக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய நெருக்கடி இருந்தது. அதிகாலையில் எழுந்து பயிற்சிகள் செய்து விட்டு வேலைக்கு செல்ல வேண்டும். பின்னர் மாலையில் மீண்டும் பயிற்சிகள்.

'2009 இல் தேசியமரதன் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டேன். அதில் எனக்கு கிடைத்த இடம் 60. அதன் பின்னர் தான் சில உண்மைகளை உணர்ந்தேன். கடின பயிற்சி இல்லாமல் வெற்றி கிடையாது. பயிற்சிநேரத்தை கூட்டினேன். வேலை பயிற்சியென காலம் கழிந்தது. அடுத்த வருடம் மீண்டும் தேசியமரதன் ஓட்டப் போட்டி. இம்முறை 20வது இடம். ஒருவருட கடின பயிற்சி 40 பேரை முந்திச் செல்ல உதவியது. இன்னும் பயிற்சிசெய்தால் எஞ்சிய 20 பேரையும் கடந்து செல்லலாமென்பதை உணர்ந்து கொண்டேன்;.'

ஒருபக்கம் குடும்பச்சுமை. மறுபக்கம் விளையாட்டு கனவு. இரண்டையும் வேறுவேறாக வைத்திருந்து சாதிக்க முடியாதென்பதை உணர்ந்ததாக கூறினார் நவநீதன். விளையாட்டு வேறு, தொழில் வேறு என்றில்லாமல் விளையாட்டே தொழிலாக மாறினால் நன்றாக இருக்குமே என யோசித்தபோதுதான் இலங்கை கடற்படையின் விளையாட்டு பிரிவில் இணையும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது.

'முழுநேரத்தையும் விளையாட்டில் செலவிட வேண்டும். இலங்கையின் சிறந்த பத்து வீரர்களில் ஒருவராக திகழ வேண்டும்' என அறிவுறுத்தப்பட்டு பயிற்சியாளர்கள் நியமிக்கப்பட்டனர். கனவை கண்முன்னால் கொண்டுவந்து ஏற்றுக்கொள்கிறாயா எனக் கேட்டால் எப்படியிருக்கும்? மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டேன்.

அதிகாலை ஐந்து மணிக்கு மாநகரசபை மைதானம் திறக்கும்போது முதல் ஆளாக நிற்பேன். பயிற்சிஞ்பயிற்சிஞ் பயிற்சி. அது ஒன்றுதான் வாழ்க்கையாக இருந்தது. முடிவு, இலங்கையின் தலைசிறந்த பத்து மரதன் வீரர்கள் என்ற பட்டியலில் எனது பெயரும் இடம்பெற்றது' என வெற்றிக்கதை சொன்னார்.

இந்த தொடர் முயற்சியின் பலனாக தாய்லாந்தில் நடந்த சர்வதேச மரதன் ஓட்டப் போட்டியில் கலந்துகொள்ளும் வாய்ப்பு நவநீதனிற்கு கிடைத்தது. புதிய சூழலிலும் சாதித்து வெள்ளிப்பதக்கத்தை வென்றெடுத்தார்.

'பயிற்சியாளர்கள், நான் சார்ந்த கழகங்கள், குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் கிடைத்த வெற்றியது. அவர்களிற்கே இதனை சமர்ப்பிக்கிறேன். சர்வதேசப் போட்டியொன்றில் தங்கம் வெல்வதுதான் எனது அடுத்தகுறி' என நம்பிக்கையுடன் பேசினார்.

எவ்வளவு தடைகளை கடந்து வந்து விட்டீர்கள், இதனையும் சாதிப்பீர்கள் என வாழ்த்தி விடைபெற்றோம்.



**வான் வாடகைக்கு**
அகில இலங்கை சுற்றுலா, போக்குவரத்து வான் வாடகைக்கு உண்டு. **L.K. Net Work**
**Tel : 077 022 2232 | 077 0222260**

**கணினி திருத்தம்**
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். **Guna Best Pc**
**Tel : 077 908 6737**

**பணிப்பெண் தேவை**
வீட்டுப்பணிப் பெண் தேவை. சம்பளம் நேரில் பேசலாம்.
**Tel : 077 509 5492**

**காணி விற்பனைக்கு**
மானிப்பாய் கனகசபை வீதியில் செல்லமுத்து விளையாட்டு மைதானத்திற்கு அருகில் அமைந்துள்ள 10 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு.
**Tel : 076 638 5626**

**காணி விற்பனைக்கு**
முத்திரைச்சந்தி, கல்விக்கந்தோர் அருகில் செல்வா் வீதியில் 7 பரப்பு காணி முழுவதும், பிரித்தும் 2½, 2½, 2 பரப்புகளாக பிரித்தும் கொடுக்கப்படும். விலை பரப்பு 15 லட்சம்.
**Tel : 077 650 8376**

**இணைய விளம்பரத்திற்கு**
இணைய விளம்பரத்திற்கு,
**Tel : 077 077 0106**
**E-mail : sales@lankaadz.com**

**திருமண சேவை**
வரன் தேடுகிறீர்களா? இலவசமாக பதிவு செய்து கொள்ளுங்கள்,

**ராஜீ திருமண சேவை**
சிவன் வீதி, ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

இணையத்தில் பதிவு செய்திட:
**Tel : 021 222 4662**

தமிழர்களின் நம்பிக்கை பெற்ற வெற்றிகரமான திருமண இணையத்தளம்
**www.jaffnamatrimony.com**

**நீங்களும் எழுதலாம்**
வரலாற்றில் முதன் முறையாக 'திராவிடம்' என்னும் சிற்றிதழ் வருகைதர இருக்கிறது. அதற்கு உங்களிடம் இருந்து ஆக்கபூர்வமான எழுத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.


பாடசாலை, பல்கலைக்கழக இளையோரிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

11\21, திருமகள் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரியர் ச. திருச்செந்தூரன்
**Tel : 077 050 7391**

**கார் வாடகைக்கு**
திருமண கார் வாடகைக்கு உண்டு.
**Tel : 077 248 7234**

**தங்குமிடம்**
நாளாந்த அறை வாடகைக்கு உண்டு சலுகைக் கட்டணத்தில், மிலேனியம் உல்லாச பயணிகள் விடுதி மற்றும் உணவகம்.
**Tel : 077 601 6310**

# அலெக்சாண்டர் கிரகம்பெல்



இன்று உலகத்தின் எந்த மூலைக்கும் யாருடனும் தொடர்பு கொள்ள முடிகிறது என்றால் அதற்கு காரணம் தொலைபேசிதான். இதற்கு முதலில் அடித்தளம் இட்ட அறிவியல் மேதை பற்றி முழுமையாக அறிவீர்களா?

கிரகம்பெல் 1847 மார்ச் 3ல் ஸ்கொட்லாந்து எடின்பர்க்கில் பிறந்தார். இவரது அப்பா சிறந்த எழுத்தாளர். பேச மற்றும் காது கேட்காத மக்களுக்கு கற்பிப்பது தொடர்பான புத்தகங்களை எழுதியவர். கிரகம்பெல், எடின்பர்க்கில் உள்ள ரோயல் உயர்நிலைப்பாடசாலையில் படித்தார். 14ம் வயதில் பட்டம் பெற்றார்.

இவர் சில ஆண்டுகள் மட்டுமே முறையான கல்வி கற்ற போதிலும், இவருடைய குடும்பத்தினர் இவருக்கு சிறந்த கல்வியை கற்பித்தனர். இவர் தாமாகவும் உயர்ந்த கல்வியை கற்றுக்கொண்டார். இவருடைய தந்தை, குரல் உறுப்பு பயிற்சியிலும், பேச்சுத் திருத்த முறையிலும், செவிப்புலனற்றவர்களுக்கு கல்வி கற்பிப்பதிலும் வல்லுனராகத் திகழ்ந்தார். எனவே குரல் ஒலிகளை மீண்டும் உருவாக்கிக் காட்டுவதில் இவருக்கு இயல்பாகவே ஆர்வம் எழுந்தது.

பின் எல்ஜினில் உள்ள வெஸ்டன் ஹவுஸ் கல்லூரியில் ஒரு ஆண்டு ஆசிரியராக இருந்தார். 1870ல் இவரது குடும்பம் கனடாவுக்கு குடிபெயர்ந்தது. அப்போது தொடர்பு இயந்திரங்கள் பற்றி படிக்க தொடங்கினார். முதலில் மின்சாரத்தை பயன்படுத்தி அதிக தூரம் கேட்கும் வகையில் பியானோவை உருவாக்கினார்.

அமெரிக்காவில் உள்ள Massachusetts மாநிலத்திலிருக்கும் Boston நகரில் 1871ம் ஆண்டில் பெல் குடியேறினார். அங்குதான் 1875ம் ஆண்டில், தொலைபேசியைக் கண்டுபிடிக்க வழிவகுத்த கண்டுபிடிப்புக்களை இவர் செய்தார். இவர் தமது கண்டுபிடிப்பிற்காக 1876ம் ஆண்டு பெப்ரவரி 7 இல் புத்தாக்க உரிமைக்காக விண்ணப்பித்தார். சில வாரங்களுக்குப் பிறகு இவருக்கு இந்த உரிமை வழங்கப்பட்டது.

கிரகம்பெல்லின் கடந்த கால அனுபவம்தான் தொலைபேசியை உருவாக்க பயன்பட்டது. இவர் 1874ல் இரும்பு மற்றும் காந்தத்தை பயன்படுத்தி ஒரு மின்சுற்றை உருவர்க்கி, பின் மின்சாரம் இல்லாமல் காந்தத்தை பயன்படுத்தி ஒலியை அதிர வைத்தார்.

பெல்லுக்குபுத்தாக்கஉரிமைவழங்கப்பட்ட பின்பு மிக விரைவிலே அவர் Filadelfia நடைபெற்ற நூற்றாண்டு விழா கண்காட்சியில் தொலைபேசியை காட்சிக்கு வைத்தார். அவரது கண்டுபிடிப்பில் மக்கள் பேரார்வம் கொண்டனர். இவரது கண்டுபிடிப்பிற்கு ஓர் பரிசும் கிடைத்தது. எனினும், இந்த கண்டுபிடிப்புக்கான உரிமைகளை 1,000,000 'Western union telegraph company' என்ற நிறுவனத்திற்கு வழங்க பெல் முன் வந்தபோதும் அதை வாங்க அந்த நிறுவனம் மறுத்துவிட்டது. அதனால் பெல்லும் அவரது நண்பர்களும் சேர்ந்து 1877ம் ஆண்டு July தங்களுடைய சொந்த நிறுவனத்தை நிறுவினார்கள். இதுதான் இன்றைய 'அமெரிக்க Telephone மற்றும் Telegraph company' இன் மூதாதையாகும். இவருடைய தொலைபேசிக்கு உடனடியாக பெருமளவில் வணிகமுறையில் வெற்றிகிட்டியது. இவர் நிறுவிய நிறுவனம் இன்று உலகிலேயே மிகப்பெரிய தனியார் வணிக நிறுவனமாக திகழ்கிறது.

இந்த கண்டுபிடிப்பை பயன்படுத்தி நாம் பேசும் ஒலிஅலைகளை, காந்த அலைகளாக மாற்றி, மீண்டும் ஒலியாக மாற்றினார். இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி டெலிபோனை உருவாக்கினார்.:

1876ல் ரெலிபோன் கண்டுபிடிப்புக்கு காப்புரிமை பெற்றார்.

1877ல் 'பெல் ரெலிபோன்' கம்பெனியை உருவாக்கினார்.

1879ல் இது பிரிட்டன் ரெலிபோன் நிறுவனத்துடன் இணைந்தது.

1880ல் 'அமெரிக்கன் பெல் ரெலிபோன் கம்பெனி' என மாற்றப்பட்டது.

1881 ஜன., 25 தோமஸ் அல்வா எடிசன் மற்றும் பெல் இணைந்து ஓரியன்டல் ரெலிபோன் கம்பெனி என்ற நிறுவனத்தை உருவாக்கினர்.

1922ல் கனடாவில் உள்ள நோவல் நகரில் கிரகம்பெல் இறந்தார்.

தொலைபேசியைக் கண்டுபிடித்ததன் காரணமாக பெல் ஒரு பணக்காரராக ஆனபோதிலும் அவர் தமது ஆராய்ச்சியை கைவிடவில்லை. வேறு பல சாதனங்களையும் அவர் கண்டுபிடித்தார்.


அவர் பல துறைகளிலும் ஈடுபாடு கொண்டுருந்தார். 1882ம் ஆண்டில் பெல் அமெரிக்க குடிமகன் ஆனார். கிரகம்பெல் தனியாக மற்றும் ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்து 15க்கும் மேற்பட்ட அறிவியல் சாதனங்களை கண்டுபிடித்தார். ரெலிபோன் தவிர, தந்தி கருவி, போட்டோபோன், போனோகிராப், செலினியம் செல் போன்றவை இவரது கண்டுபிடிப்புகளில் முக்கியமானவை.

## பணத்தால் முடியாது

ஒரு நாள் துறவி ஒருவரைச் சந்தித்த செல்வந்தன் ஒருவன் பணத்தால் வாங்க முடியாத பொருள் ஏதும் உள்ளதா? என்று கர்வத்துடன் கேட்டான்.

அதற்கு துறவி குழந்தையின் முகத்தில் சிரிப்பை வரவழைப்பது, முதுவீமை அடைந்தவர்களுக்கு மீண்டும் இளமை தருவது, நல்ல மனிதன் அன்பை பெறுவது, இறையனுபவம் பெறுவது இந்த நான்கும் செல்வத்தால் வாங்க முடியாதவை என்று சொன்னார். துறவியின் பதிலை கேட்ட செல்வந்தன் தெளிவு பெற்றான். அன்பையும் குணத்தையும் நல்ல மனிதர்களையும் செல்வத்தால் வாங்க முடியாதல்லவா.

## இறைவன் இருக்கும் இடம்



ஒரு தடவை ஒரு கிராமத்து மக்கள் கடவுளைத் தேடிக் கண்டுபிடிக்க நினைத்து பயணம் மேற்கொண்டார்கள். அவர்களது மடத்தனத்தை போக்க எண்ணிய துறவி ஒருவர் குதிரை மீது அமர்ந்து அவர்கள் முன்பு எதையோ தேடுவது போல் சென்று கொண்டிருந்தார். அதை பார்த்த மக்கள் எதை தேடுகிறீர்கள் சுவாமி என்றார்.

என் குதிரையை தேடுகின்றேன் என்றார் துறவி. எல்லோரும் சிரித்தார்கள். குதிரை மீது தானே அமர்ந்திருக்கிறீர்கள் என்றார்கள். ஏன் சிரிப்பு? அவரவருக்குள்ளேயே கடவுள் இருக்கும் பொழுது நீங்கள் அவரை தேடிப் போகிற மாதிரிதான் நானும் என் குதிரையைத் தேடிப் போகின்றேன். என்றார் துறவி. யாத்திரை சென்றவர்கள் வெட்கத்துடன் திரும்பினார்கள்.

இதற்கு பொருத்தமான வர்ணத்தை தீட்டுங்கள்




## மாணவர் பூங்கா



'தீபத்தின் பரிசுமழை' வெற்றியாளர்களை தேர்வு செய்யும் நிகழ்வு நோர்சி மீடியா அலுவலகத்தில் கடந்த 01.04.2016 அன்று நடந்தது. நோர்சி மீடியா நிறைவேற்று அதிகாரி திரு.செந்தூரன் வெற்றியாளரின் பெயரை தேர்வு செய்வதையும், அருகில் நிர்வாகப்பணிப்பாளர் திரு.புரட்சிதாசன், விநியோக முகாமையாளர் திரு.ஜெபநேசன், விளம்பர முகாமையாளர் திரு.கஜன் ஆகியோர் நிற்பதையும் காணலாம்.




ஈஸ்ரர் தினத்தை முன்னிட்டு உருவாக்கப்பட்ட பிரமாண்ட ஒம்லெட் இது. பிரான்சில் உருவாக்கப்பட்டது. 15,000 முட்டைகளை கொண்டு 50 பேர் கொண்ட சமையல்குழு இதனை தயாரித்துள்ளது. நெப்போலியன் தமது கிராமத்திற்கு ஒருமுறை வந்ததாகவும், அவரது நினைவாக வருடாந்தம் இதனை தயாரிப்பதாகவும் அந்த மக்கள் கூறியுள்ளனர்.



அண்மையில் கழுகொன்றை ஒரு கும்பல் கொடூரமாக கொன்ற படங்கள் சமூக வலைத்தளங்களில் பரவி பரபரப்பை ஏற்படுத்தியது. புரவலான அதிர்வை ஏற்படுத்தியதையடுத்து அந்த கும்பல் கைதாகியது. இந்த பரபரப்பு அடங்குவதற்குள் அடுத்த பரபரப்பு கிளம்பியுள்ளது. மயிலொன்றை வேட்டையாடிய படமொன்றை ஒருவர் பேஸ்புக்கில் பதிவேற்றி சிக்கிக் கொண்டுள்ளார். இதற்கும் பரவலான கண்டனங்கள் கிளம்பியதையடுத்து, படத்திலிருப்பவரை அடையாளம் காட்டும்படி பொதுமக்கள் கோரப்பட்டிருந்தனர். ஆதற்கு கைமேல் பலன்கிட்டியுள்ளது. ஆனமடுவ பகுதியை சேர்ந்த பிரபல வர்த்தகரின் மருமகன் இவரென்றும், இத்தாலியிருந்து வந்து சட்டவிரோத துப்பாக்கியை பயன்படுத்தி மயில் வேட்டையாடி பேஸ்புக்கில் போட்டு சிக்கிக் கொண்டுள்ளார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.




கண்டியில் கண்டெடுக்கப்பட்ட சிறுத்தைப்புலியின் சடலம் இது. மூன்றடியான இந்த சிறுத்தை அந்த பகுதியிலுள்ள குடியிருப்பாளர்களிற்கு தொல்லை கொடுத்து வந்துள்ளது. காட்டுப்பன்றியொன்றின் தாக்குதலாலேயே கொல்லப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. மலையக காடுகளில் மட்டுமுள்ள அரியவகை சிறுத்தையினம் இது.



அமெரிக்காவில் எடுத்ததற்கெல்லாம் துப்பாக்கிச்சூடு நடந்தவரும் நிலையில் மேலும் பீதியை கிளப்புகிறது இந்த செய்தி. ஸ்மார்ட்போன் வடிவத்தில் அறிமுகமாகியுள்ளது கைத்துப்பாக்கியொன்று. ஸ்மார்ட்போனைப் போல மடித்து வைத்திருந்துவிட்டு, தேவையான சமயத்தில் துப்பாக்கியாக்கலாம். இந்த வருட இறுதியில் விற்பனைக்கு வருகிறதாம். இதன் விலை 410 அமெரிக்க டொலராம்.



வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயத்தின் பாம்பு பக்தர்களிற்கு காட்சியளித்ததென மெய்சிலிர்த்த சம்பவம் கடந்த வாரம் நிகழ்ந்தது. ஆலயத்தில் குடியிருக்கும் பாம்பு படம் எடுத்தபடி அங்கு காட்சி கொடுத்தது சமூக வலைத்தளங்களிலும் வைரலாக பரவி வருகிறது.



பண்டாரவெலவிலுள்ள வனப்பகுதி குகையொன்றில் இராவணன் வாழ்ந்து வருகிறார். அவர் கனவில் வந்து என்னை அழைக்கிறார் என கூறி பெண்ணொருவர் சிறு குழுவுடன் இராவணனை தேடி புறப்பட்ட சம்பவம் கடந்த வாரம் நடந்தது. காட்டுக்குள் பாதிதூரம் சென்ற குழுவினர் திரும்பி வந்துவிட்டனர். 'மக்கள் ஒளிந்திருந்து பார்த்ததால் இராவணன் எனக்கு வேறு பாதை காட்டி காட்டிற்கு வெளியில் கொண்டு வந்து விட்டுவிட்டார்' என மீண்டும் மிரட்டியிருக்கிறார் அந்த பெண்.










இப்பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 03.04.2016 அன்று வெளியிடப்பட்டது